DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1479 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 9, 2024

# எமது மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்? மாகாணசபைத்தேர்தலுக்கு பிரேரணை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்...

## சமூக வலைத்தளத்தில் ஒரு மனிதநேயமுள்ள குமுறல்



C.V. Wigneswaran M.A. Sumanthiran Angajan Ramanathan

இங்கே மக்களுக்கு அநீதி நடைபெற்றக்கொண்டிருக்கிறது, அது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் ஆக்கபூர்வமானதாக இல்லை . எமது மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள் ? மாகாணசபைத்தேர்தலுக்கு பிரேரணை போட்டுக்கொண்டிருக்கிறார்கள் இன்னும் ஒருதரப்பு பொது வேட்பாளர தேடிட்டு இருக்கு . இன்னும் ஒரு தரப்பு புறக்கணிக்க சொல்லி நோட்டிஸ் கொடுக்குது

மாகாணசபை இயங்கியபோது பிரதிநிதிகளாக உள்ளவந்த வைத்தியர்கள் தமது மக்களுக்கக செய்தது என்ன ? அவர்கள் தங்கள் வன்னி மாவட்ட வைத்திய சாலைகளில் ஒரு **CT scan** இயந்திரத்தை கூட பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கவில்லை ஆனால் அவர்களது சொந்த தனியார் வைத்திய சாலைகளில் ஊவு ளஉயடெ வசதி வைத்திருக்கின்றனராம் இவை தான் மக்கள் பிரதிநிதிகளின் பணிசெய்தலின் ‘மாண்பு’

மன்னார் , முல்லத்தீவு மாவட்ட வைத்திய சாலைகளில் இன்னும் ஐவெநசெ வசதி இல்லையாம் இன்ரேன் அனுமதிப்பதாயின் நிரந்தர வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டுமாம். தற்போது தற்காலிக வைத்திய நிபுணர்களே கடமையாற்றுவதாக அறிய முடிகிறது . உண்மையில் இந்த மாவட்டங்களை சேர்ந்த மக்கள் தங்களுக்கான தரமான தடை இன்றிய மருத்துவ வசதியை பெறுவதற்கான உரிமையை மறுக்கப்பட்டிருக்கின்றார்கள். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

# நாமல் ராஜபக்ச என்னும் ‘இளம் ஊழல்வாதியை’ களமிறக்கியுள்ள ‘ராஜபக்சக்கள் குடும்பம்’

(கே.பாலா)



இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ள நிலையில் ஜனாதிபதி கதிரையை கைப்பற்றுவதற்கு பலமுனைப்போட்டி ஏற்பட்டுள்ளது மட்டுமன்றி என்றுமில்லாதவாறு இம்முறை பிரபல வேட்பாளர்கள் பலர் களமிறங்கியுள்ளதால் தேர்தல் களத்தில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதுடன் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதனைக்கூட கணிக்க முடியாத ஜனாதிபதித் தேர்தலாகவும் மாறிப்போயுள்ளது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# மனோ கணேசனின் அழைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால்...?

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இருந்த மக்களின் மனநிலையை விட வேட்பாளர்கள் அல்லது கட்சிகளில் நிலைப்பாடு மாறிக்கொண்டே இருக்கின்றது. அதற்கான காரணங்களைப் பார்ப்போமானால் ஒவ்வொரு சிறிய கட்சியும் தங்களோடு ஒத்துழைக்கக் கூடிய வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்யதுதான் நோக்கம் என்பது அல்ல. யாரிடமிருந்து அதிகளவு 'தொகை' பெற்றுக்கொள்ளலாம் என்பது தான் அவர்களது நோக்கமாக உள்ளது.

இன்னொரு பக்கத்தில் ஜேவிபி கட்சியின் தலைவர் அநுர குமாரவிற்கு தென்னிலங்கையில் மக்கள் ஆதரவு உச்சத்தில் உள்ளதை கண்கள் மூலம் பார்க்கக் கூடியதாக உள்ளது. அவ்வாறு வெற்றிக்கான சந்தர்ப்பத்தைக் கொண்டு அநுரவிற்கு சி றுபான்மை மக்களினதும் கணிசமான ஆதரவு உள்ளதையும் கணிப்புகள் கூறுகின்றன. அநுர குமாரவிற்கு வெளிநாடுகளில் வாழும் தென்னிலங்கை மக்களும் வாக்களிப்பதற்காக இலங்கைக்குச் செல்வதற்காக பயணங்களை திட்டமிடுவதாகம் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இவ்வாறிருக்கையில். கொழும்பை வாழ்விடமாகக் கொண்டும் மலையக மக்களை அரசியல் தளமாகவும் கொண்டு அரசியல் செய்துவரும் மனோ கணேசன் அவர்கள் நேற்றைய தினம் "வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டும்." என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் அழைப்பு விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்களில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே மனோகணேசன் மேற்படி அழைப்பை விடுத்தார்.

"பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் ஏனைய மதங்களை சேர்ந்தவர்களும், சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்துள்ள இலங்கையர் கூட்டணியாக ஐக்கிய மக்கள் கூட்டணி உள்ளது. அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுக்கூட கூடிய இடமாக இந்த கூட்டணி உள்ளது.

அதேபோன்று நாட்டை கட்டியெழுப்பக் கூடிய மற்றும் பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்ட அணியும் எம்மிடமே உள்ளது. வடக்கு,கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் நடைமுறைக்கு சாத்தியமான தீர்வுகளை பெற்றுக்கொள்ள இந்த மகா கூட்டணியில் இணையுமாறும் அழைப்பு விடுக்கிறேன்." என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனாலும், ரணிலிடமும் மகிந்தாவிடமும் மாறி மாறி தொகைகளையும் சலுகைகளையும் தொடர்ச்சியாகப் பெற்று வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாகவும் அமைச்சர் பதவி வகித்த மற்றுமொரு மலையக அரசியல்வாதி அந்தப் பதவியைப் பயன்படுத்தி சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதனால் மகிந்தாவால் எச்சரிக்கப்பட்டதாகவும் தகவல்கள் முன்னர் வெளிவந்த நிலையில் மனோ கணேசன் தனது அழைப்பை மற்றொரு முறையில் விடுத்திருந்திருந்தால், தமிழ் மக்களுக்கு (தமிழ் அரசியல்வாதிகளுக்கு அல்ல) சற்று நிம்மதி கிடைத்திருக்கும். அல்லது அவர்களின் தலைகளில் உள்ள சுமைகள் சற்று இறங்க வாய்ப்புக்கள் கிட்டலாம். அதாவது வெற்றி வாய்ப்பு உள்ள அநுர குமாரவிற்கு ஆதரவு வழங்கும்படி தமிழ் மக்களுக்கு வேண்டுகோளை மனோ கணேசன் விடுத்திருக்கலாம். ஏனென்றால், அநுர குமாரவைத் தவிர வேறு எந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவரால் மக்களுக்கு பயன் எதும் கிட்டாது மூவினங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மாத்திரமே பயனடைவார்கள்- சாராயத் தவறணைகள் மற்றும் வெளிநாட்டு இறக்குமதிக் கோட்டா ஆகியவையும் கிட்டும்.˙.

அநுர தமிழ் அரசியல்வாதிகளுக்கு அமைச்சர் பதவிகள் வழங்க மாடடார், ஆனால் நடுத்தர மற்றும் ஏழை மக்களின் வாழ்க்கையில் சற்று நிம்மதி தோன்றும். மனோ கணேசன் தனது மனதை மாற்றி கொள்ள வேண்டுகின்றோம்!

# மக்கள் போக்குவரத்தை எளிதாக்க கார்டினர் நெடுஞ்சாலை புனரமைப்பை ஒன்ராறியோ அரசு விரைவுபடுத்துகிறது (பின் பக்கத் தொடர்ச்சி)

அந்த செய்திக்குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்காலச்சுருக்க விரைவு வேலைத்திட்டமானது, வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணிநேர புனரமைப்பு வேலைகளை அனுமதிப்பதன் மூலம் ரொறன்ரோ மற்றும் அதனைச் சூழவுள்ள பீல், ஹோல்டன், யோர்க், ஹமில்ட்டன் உள்ளடங்கலான பகுதிளிலிருந்து நாள்தோறும் பயணிக்கும் 140,000 வாகனங்களின் நெரிசலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

"அன்றாடம் கார்டினர் நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் 140,000 வாகன ஓட்டுநர்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களை விரைவாக அடைய எமது அரசாங்கத்தின் இந்நடவடிக்கை உதவும்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார். தாமதங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, ஏப்ரல் 2026க்குள் முடிவடையவுள்ள இத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் 273 மில்லியன் டொலர்களை மீதப்படுத்தலாம். இம்முக்கியமான நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் அனைவருக்கும் அவர்களது பயணங்களை இலகுவாக்க நெடுஞ்சாலை உள்நுழைவு மற்றும் வெளிறும் வழிகளின் திருத்தம், புதிய போக்குவரத்து மேலாண்மைத்துவம் ஆகியவை இம்மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.

# Kamala Harris Announces Tim Walz as Vice-Presidential Pick for 2024 Election

By: Athisayaa Prabagar

Kamala Harris, Vice-president of the United States, has announced that Minnesota Governor Tim Walz will be her running mate in the 2024 elections, securing the Democratic nomination on Monday. Harris introduced Walz at a rally in Philadelphia on Tuesday night, highlighting his extensive background and commitment to public service.

Harris, who referred to her running mate as "Coach Walz", recognized his successful career as a high school football coach in Minnesota. Originally from rural Nebraska, Walz also has a history of being a teacher and 24 years of serving in the Army National Guard, before becoming a governor. His diverse and impactful background underscores his commitment to his voters and community.

Premier Doug Ford also voiced his approval of Harris's selection of Walz as her vice-presidential mate. Ford expressed his satisfaction with his interaction with Walz during a recent visit at Queen's Park. Ford noted their similarities between his own and Walz's. They tossed around a CFL football in Fords' office while discussing their shared focus in politics and U.S.-Canada trade relations.

In Walz's role as governor, he has achieved significant legislative victories and successfully navigated through critical challenges, including the COVID-19 pandemic. His connection with his voters and record in pragmatic governance are key assets for the Democratic campaign.

Walz's selection as Harris's running mate, can strengthen Harris's appeal in the Midwest, which is a critical region for the election outcome.While Minnesota has traditionally leaned Democratic, Walz's presence could help influence and secure more voters in that region.

With the 2024 election approaching near, the Harris-Walz campaign is set to embark on a nationwide effort to connect with voters and emphasize their shared vision for the future as well as their dedication to addressing the needs of Americans.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ் மக்கள் இனப் பிரச்சினைக்கு சமஸ்டி தீர்வே அவசியம்

## வட மாகாண இணைப்பாளர் ஜான்சன் தெரிவிப்பு!



நாகரிகமான நாடுகள் சமஸ்டியை தீர்வாக ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு சமஸ்டி தீர்வே வேண்டுமென வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் வட மாகாண ஒருங்கிணைப்பாளர் ஜான்சன் தெரிவித்தார்.

கடந்த 30-07-2024 வியாழக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக சமஸ்டி அடிப்படையிலான தீர்வையே முன்வைக்க வேண்டும் என இரண்டு வருடங்களுக்கு முன்னர் மக்கள் பிரகடனம் ஒன்றை வெளியிட்டது.

அந்தப் பிரகடனத்தை தமிழ் அரசியல் தலைமைகள் பல ஏற்றுள்ள நிலையில் எமது மக்கள் பிரகடனம் ஏற்படுத்தப்பட்டு இரண்டாவது வருட நிறைவு நாளில் இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்தோம்.

உலகில் பல இனங்கள் உள்ள நாட்டில் சமஸ்டி கோரிக்கையை நிறைவேற்றி நாகரிகமாக நாடுகளாக காணப்படுகின்ற நிலையில் இலங்கையிலும் தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெற்று வாழ்வதற்கு சமஸ்டி அடிப்படையிலான தீர்வு அவசியம்.

எமது சமஸ்டி மக்கள் பிரகடனத்தை தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பல்வேறு வேலை திட்டங்களை செயற்படுத்த உள்ளோம்.

அதில் ஒரு அங்கமாக சமூக வலைத்தளத்தை பயன்படுத்தி சமஷ்டிப் பிரச்சாரத்தை கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன.

ஆகவே இலங்கை தீவில் அதிகமாக தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்கு கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாக சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு முன்பு வைத்துள்ள நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் மேலும் தெரிவித்தார்.





# பொருளாதார யுத்தத்தை வெற்றிகொள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிவரும் ஆதரவு மகத்தானது

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு!

நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வேலைத் திட்டங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வருகின்ற ஆதரவு மகத்தானது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் அதை முன்னெடுத்துச் செல்ல முழுமையான ஒத்துழைப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக வடக்கின் மக்களிடம் இருந்து கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். அலுவலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் தனது வேலைத் திட்டங்களுக்கு, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வருகின்ற ஆதரவை சுட்டிக்காட்டியதுடன், இவ்வாறான ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பியின் தலைமை காரியாலயத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 03.08.2024 அன்று வருகை தந்திருந்தார்.

யாழ். அலுவலகத்திற்கு வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஈபிடிபியின் ஆதரவாளர்கள் மகத்தான வரவேற்பளித்திருந்தனர். இதையடுத்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடந்த எமது நாட்டை கட்டியெழுப்பும் முயற்சியில் நான் இறங்கியபோது எனக்கு பெரும் பக்கபலமாகவும் உறுதுணையாகவும் இருந்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அதுமட்டுமல்லாது இந்நாட்டின் கடற்றொழில் அமைச்சராக இருந்து நாட்டின் பொருளாதார ஈட்டலுக்கு மட்டுமல்லாது கடற்றொழில் மக்களுக்கு குறிப்பாக வடபகுதி மக்களுக்கான சிறந்த சேவையையும் ஆற்றிவருகின்றார்.

இதேவேளை யாழ் மாவட்டத்தை யாழ் நதி திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சிமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலயமொன்று ஆரம்பிக்கப்படும்.

பூநகரியிலும் அதனை செய்வோம். பலாலியில் சுற்றுலா துறையை மேம்படுத்துவோம். காற்று, சூரிய சக்தி மூலம் பெருமளவில் இங்கு மின் உற்பத்தி செய்ய முடியும். அதனால் மேலும் பல பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

அத்துடன் எதிர்வரும் 10 வருடங்களுக்குள் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். எனவே நாம் அடுத்தபடியாக பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். என தெரிவித்திருந்த ரணில் விக்ரமசிங்க அதற்கான முழுமையான ஒத்துழைப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக வடக்கின் மக்களிடம் இருந்து கிடைக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி வேட்பாளருடனான சந்திப்பு பரகசியமானதே – அனந்தி சசிதரன் தெரிவிப்பு!



நான் ஜனாதிபதியுடன் ரகசியமான சந்திப்பில் ஈடுபடவில்லை. பரகசியமான சந்திப்பிலேயே ஈடுபட்டேன் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமான ஆனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

05-08-2024 தினம் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளர்கள் என்ற வகையில் கடந்த மாதம் சஜித் பிரேமதாச அவர்களை சந்தித்து இருந்தேன். வடக்கு கிழக்கு மக்கள் தொடர்பான அவர்களுடைய நிலைப்பாடு என்ன என்பதை நான் கேட்டுக் கொண்டேன்.

அதேபோல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களையும் நான் சந்தித்திருந்தேன். நான் ஏற்கனவே வடக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்துகின்றேன். தற்பொழுது ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தினுடைய செயலாளர் நாயகமாகவும் பணியாற்றுகின்றேன்.

ஒரு மரியாதையின் நிமித்தமே நான் ஜனாதிபதி வேட்பாளரை சந்திக்கின்றேன். அந்த சந்திப்பில், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக அவருடைய நிலைப்பாடு என்ன? அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தான தீர்வுகள் என்ன என்பது தொடர்பாக கேட்டுத் தெரிந்து கொள்கின்ற நிலையில் இந்த சந்திப்பை மேற்கொண்டேன்.

இந்த சந்திப்பானது இரகசியம் அல்ல. பரகசியமான சந்திப்பு தான். அந்த வகையில் நான், தொடர்ந்தும் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் எனக்கு அழைப்பு விடுக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களையும் சந்தித்து அவர்களுடைய நிலைப்பாடுகள் என்ன என்பதை அறிந்து மக்களுக்கு சொல்வதில் நான் தயாராக இருக்கின்றேன் என்றார்.



# கிளிநொச்சி / பளை மத்திய கல்லூரி மாணவ சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் வைபவம்!

கிளிநொச்சி/பளை மத்திய கல்லூரியின் சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் வைபவம் 05.08.2024 அன்றையதினம் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் திரு. கு. ரவீந்திரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரபல தொழிலதிபர் மற்றும் சமூக சேவகர் திரு. நடேசபிள்ளை காந்தரூபன் (London) ஆகியோரும் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினராக கிளி. மாவட்ட சாரண ஆணையாளர் சி.விக்னேஸ்வரன், அவர்களும் கௌரவ விருந்தினர்களாக பளை கோட்ட உதவிச்சாரண ஆணையார் த. நிர்மல், சாரணிய உயர் விருதான ஜனாதிபதி விருது பெற்ற. செல்வி யோ. கோமகள், உதவி அதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



மேலும் இந்நிகழ்வில் புதிதாக இணைந்த சாரண மாணவர்களுக்கு சின்னங்கள் அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வினை பாடசாலை சாரணிய ஆசிரியர் திரு. ப. நிசாந்தன் மற்றும் ச. டனிஸ் ஆகியோர் ஒழுங்கமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் பிரபல வர்த்தகர் கைது – விசாரணை ஒன்றுக்கு வாக்குமூலம் வழங்காமையினால் விளக்கமறியல்

(03-08-2024)

மன்னார் - நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான ரொஜன் ஸ்டாலின் என்பரை இலுப்பைகடவை பொலிஸார் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் மணல் அகழ்வு தொடர்பான முரண்பாடு ஒன்றில் ஆத்திமோட்டை விவசாய அமைப்பின் தலைவரும் தமிழரசு கட்சியின் பிரதேச சபை வேட்பாளருமான நபர் ஒருவரை தாக்கி காயப்படுத்திய நிலையில் குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

இவ் வழக்கில் நீண்ட நாட்களாக வாக்குமூலம் வழங்க குறித்த வர்த்தகரை இலுப்பை கடவை பொலிஸார் அழைத்த நிலையில் நீண்ட நாட்கள் வாக்குமூலம் வழங்காத நிலையில் நீதிமன்றத்திலும் முன்னிலையாகமால் இருந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த மாதம் நீதிமன்றத்தில் குறித்த நபர் ஆஜராகிய நிலையில் வாக்குமூலம் உடனடியாக வழங்குமாறு நீதவானால் உத்தரவிடப்பட்டது.

இருப்பினும் வாக்குமூலம் வழங்க வருகை தந்தும் வாக்குமூலம் வழங்காது தப்பித்து சென்றதாக குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.



# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையினுள் வைத்தியர் அர்ச்சுனாவுடன் சென்ற யூடுப் வலைத்தள பதிவாளர்களை கைது செய்ய உத்தரவு – பொது மக்கள் விசனம்



(03-08-2024)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையினுள் 02-08-2024 அன்று வெள்ளிக்கிழமை இரவு அனுமதியின்றி நுழைந்து பெண்கள் மகபேற்று விடுதிக்குள் பணியாற்றிய வைத்தியருக்கு இடையூறு விளைவித்த துடன் வைத்தியரின் அறைக்கு சென்று அனுமதி இன்றி புகைப்படங்கள் வீடியோ எடுத்தமை தொடர்பில் மன்னார் பொலிஸில் வைத்தியர் அர்சுனா விற்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் வைத்தியர் அர்ச்சுனாவுடன் வைத்தியசாலைக்குள் நுழைந்த இரண்டு யூரிப் சமூக வலைத்தள பதிவாளர்கள் உள்ளடங்களாக அத்துமீறி நுழைந்த அனைவரையும் கைது செய்ய மன்னார் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குள் வெள்ளிக்கிழமை 02-08-2024 அன்று இரவு சாவக்கச்சேரி வைத்தியசாலையில் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் அர்சுனா இராமநாதன் உள் நுழைந்து பெண்கள் மகபேற்று விடுதிக்குள் பணியாற்றிய வைத்தியருக்கு இடையூறு விளைவித்த துடன் வைத்தியரின் அறைக்கு சென்று அனுமதி இன்றி புகைப்படங்கள் வீடியோ எடுத்தமை தொடர்பில் மன்னார் பொலிஸில் வைத்தியர் அர்சுனா விற்கு எதிராக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டிற்கு அமைவாக சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் அர்சுனா இராமநாதன் சனிக்கிழமை மன்னார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த வைத்தியரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த வைத்தியருடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளரின் அனுமதி இன்றி உள் நுழைந்தவர்களையும் கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்த மன்னார் நீதவான் காவல் துறையினருக்கு உத்தரவு பிரப்பித்துள்ளதகவும் தெரிய வருகின்றது.

இதற்கு அமைய குறித்த வைத்தியரால் அழைத்து வரப்பட்ட மன்னாரை சேர்ந்த யூரிப் சமூக வலைத்தள பதிவாளர் உள்ளடங்கலாக சிலரை கைது செய்து மன்றில் ஆஜர்படுத்த காவல் துறையினருக்கு உத்தரவு பிரப்பித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.



# மன்னாரில் உயிரிழந்த இளம் தாய்க்கு நிகழ்ந்தது தவறு அல்ல, குற்றம் — சுகாஷ் சீற்றம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

நள்ளிரவில் குருதிப் போக்கினால் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 27 வயதேயான இளம் பட்டதாரிப் பெண் திருமதி. மரியராஜ் சிந்துஜா, அடுத்த நாள் காலையில் மயங்கி விழும்வரை உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என சிரேஷ்ட சட்டத்தரணியான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவரது முகநூலிலயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், பிறந்து சில நாட்களேயான சிசுவைத் தவிக்கவிட்டுத் தாயார் மரணித்துள்ளார். உடனடியாகச் சிகிச்சையளித்திருந்தால் நிச்சயம் அவரைக் காப்பாற்றியிருக்கலாம். விடுதிக்குப் பொறுப்பான வைத்தியர்கள், தங்கும் விடுதியிலிருந்தும் தாதிய உத்தியோகத்தர் அறிவித்தும் விடியும்வரை சிகிச்சையளிக்க முன்வரவில்லை. இது தவறல்ல, குற்றம்.

நீதியான - வெளிப்படையான விசாரணைகள் மூலம் குற்றவாளிகள் அம்பலப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அதன் மூலமே சுகாதாரத்துறை மீதான மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க முடியும் என்பதோடு நேர்மையாகப் பணிபுரியும் வைத்தியர்களின் சேவையும் போற்றப்படும்.

இந்நிலை தொடர்ந்தால் அரசியல் பிரச்சனைகளுக்காகப் போராடும் நாங்கள், மருத்துவ அலட்சியங்களுக்கு எதிராகவும் போராட வேண்டி ஏற்படும்.

எமது உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்படுவதை வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

தயவுசெய்து பொறுப்போடு செயற்படுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என குறிப்பிட்டுள்ளார்.



# செம்பியன்பற்றில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சைக்கிள் பவனி!

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சைக்கிள் பேரணி ஒன்று 06-08-2024 அன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் சு. கணேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வடக்கு மாகாண கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும், கூட்டுறவு ஆணையாளருமாகிய ந. திருலிங்கநாதன் கலநத கொண்டிருந்ததுடன் சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் பாடசாலை பரிசளிப்பு விழாவின் அனுசரணையாளருமான க. இராஜரட்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

காலை 8 மணியளவில். மாணவர்களின் நடை பவனியும் அதனை தொடர்ந்து சைக்கிள் பவனியும், பழைய மாணவர்களின் வாகன பேரணிகளும் இடம் பெற்றது.

பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமான குறித்த பவனி மாமுனைச் சந்தியை அடைந்து அங்கிருந்து மாமுனை கடற்கரைக்கு சென்று, கடற்கரையிலருந்து தாளையடி கடற்கரை சென்று அங்கிருந்து மருதங்கேணி சந்திக்கு சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையை சென்றடைந்தது.

குறித்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அயல் பாடசாலை அதிபர்கள் கோட்டக்கல்வி பணிப்பாளர், உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







# பொன்னாலை நாராயணன் அறக்கட்டளை மற்றும் விக்டோரியா ஆன்மீக அறக்கட்டளை இணைந்து பல்வேறு உதவித் திட்டங்கள்

ஆடி அமாவாசை தினமான வழக்கம்ப அம்மன் அறக்கட்டளை, பொன்னாலை நாராயணன் அறக்கட்டளை மற்றும் விக்டோரியா ஆன்மீக அறக்கட்டளையின் அறங்காவலர்கள் இணைந்து 2 மாணவர்களுக்கான கல்விக்கான நிதி உதவி, 20 ஏழை குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் 2 பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் கோழிகள் உள்ளிட்ட கோழி கூண்டுகளுடன் கோழிகளுக்கான உணவுக்கான ஒரு தொகை பணம் என்பன வழங்கப்பட்டன.

ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் வசிக்கும் திரு. ஈஸ்வரன் தனது அன்புத் தந்தையின் நினைவாக ரூபாய் 142,000 மற்றும் அமெரிக்காவில் நியூயார்க்கில் வசிக்கும் திரு. குமரேசு ஜெகநாதன் தனது அன்பான தந்தையின் நினைவாக ரூபாய் 30,000 நன்கொடையாக வழங்கினர். அந்த நிதியிலேயே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டன.







# லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட படையினரின் 32ஆவது வருட அஞ்சலி அராலித்துறையில் நினைவுகூரப்பட்டது!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இலங்கை இராணுவ அதிகாரி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உள்ளிட்ட படையினரின் 32ஆவது வருட நினைவையொட்டி அவர்கள் கொல்லப்பட்ட இடத்தில் படைத்தரப்பினர் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணம் - அராலித்துறையில் அவர்கள் கொல்லப்பட்ட இடத்தில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் 08-08-2024 அன்று அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளை தளபதி மேயர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.



1992 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை பிரதேசத்தின் அராலித்துறையில் தம-ிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உள்ளிட்ட 9 இராணுவ அதிகாரிகளும், ஒரு சிப்பாயும் உயிரிழந்தனர்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரத்தின, ரியர் அட்மிரல் மொஹோன் ஜயமக, கேணல் எச் ஆர் ஸ்டீபன், கேணல் ஜி எச் ஆரியரத்தின, கேணல் வை என் பலிபான, கொமாண்டர் அசங்க லங்காதிலக, லெப்டினன்ட் கேணல் நலிந்த டி சில்வா, லெப்டினன்ட் கொமாண்டர் சி பீ விஜயபுர மற்றும் இராணுவ சிப்பாய் டபிள்யூ டீ விக்ரமசிங்க ஆகியோரே இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

# வட மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவு ஸ்தாபிக்கப்பட வேண்டும் — ஆளுநர் பணிப்புரை



வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் (08-08-2024) நடைபெற்றது. கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.



மாகாண சுகாதார துறையில் காணப்படும் சிக்கல்கள், மேற்கொள்ள வேண்டிய பொறிமுறை மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவை ஸ்தாபிக்குமாறு மாகாண சுகாதார நிர்வாக அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த கௌரவ ஆளுநர் அவர்கள், அந்த பிரிவிற்கான ஆளணியை நியமித்து உரிய பயிற்சிகளை வழங்குமாறும் ஆலோசனை வழங்கினார். அத்துடன் வைத்தியசாலைகளை ஒருங்கிணைப்பதற்கான தரவுப் பொறிமுறை ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். சுகாதார துறைக்கு தேவையான ஆளணி, வளப்பற்றாக்குறை, தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்பிக்குமாறு மாகாண சுகாதார பணிப்பாளருக்கு கௌரவ ஆளுநர் அவர்கள் பணிப்புரை விடுத்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கோணங்களில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்ற போதும் இது வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் அடிகளார்

- எஸ்.ஆர்.லெம்பேட் (06-08-2024)

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கோணங்களில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்ற போதும், இது வரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. எனவே மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் சகல விதமான பிரச்சனைகளுக்கும் நாட்டின் ஜனாதிபதி உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விசேட ஊடக சந்திப்பு 06-08-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக கணிய மணல் அகழ்வு திட்டத்தை முன்னெடுப்பதற்கான பாரிய முயற்சிகள் இடம்பெற்று வருகின்றது பல்வேறு கம்பனிகளால். இறுதியில் ஒரு கம்பெனி ஒன்று கணிய மணல் அகழ்வுக்காக மன்னார் மாவட்டத்தில் கால் பதித்துள்ளது. குறித்த கம்பெனி குறித்த இடத்தை கையகப்படுத்திக் கொள்ள அனுமதி வழங்க பல்வேறு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகிறது.

மக்கள் சார்பாக நாங்கள், பொது அமைப்புக்கள் பல்வேறு எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்ற போதும், குறித்த நடவடிக்கையை செயல்படுத்த பல்வேறு அரச நிறுவனங்களின் முயற்சியுடன் வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி கணிய மணல் அகழ்வு செய்யப்படவுள்ள இடங்களை நிள அளவீடு செய்ய சுமார் 32 அரச திணைக்களங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதை மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றினைந்து முழுமையாக எதிர்க்க உள்ளோம். மக்கள் ஒன்றிணைந்து முழுமையாக எதிர்ப்பை காட்ட உள்ளோம். எனவே குறித்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சில செயல்பாடுகளையும் கவலையுடன் கூறிக் கொள்கிறேன். சில வாரங்களுக்கு முன் ஒரு குழந்தையை பெற்றெடுத்த தாய் ஒருவர் அதிக இரத்தப்பெருக்கின்ற காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இறப்பிற்கான காரணம் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழு சார்பாக கோரிக்கை விடுத்துள்ளோம்.




எழுத்து மூலம் வைத்தியசாலை தரப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எமக்கும் பதில் அனுப்பி வைத்துள்ளனர். துரித விசாரனைகள் இடம் பெற்று வருவதாகவும் தவறிழைத்தவர்களுக்கு எதிராக முழுமையான சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என குறிப்பிட்டுள்ளனர்.

மனிதர்களையும், மனித உரிமைகளையும் மதிக்கின்ற வகையில் அனைத்து வைத்தியசாலைகளும் இயங்க வேண்டும். குறித்த சம்பவத்திற்கான முழுமையான விளக்கத்தை வைத்தியசாலை தரப்பினர் மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

அதன் போதே மக்கள் வைத்தியசாலை, வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துவார்கள்.

எனவே தவறுகளை நிவர்த்தி செய்யும் வகையில் உண்மை நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும் மன்னார் மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர் என்ற தரவு எங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள இளையோர் சிறுதொழில் முயற்சிக்காக காணியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளனர்.

சுமார் 800 இற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். எனினும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனினும் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற, பணம் படைத்தவர்களுக்கு மக்களினுடைய காணிகள் பகிர்ந்தளிக்க படுகின்றதை கண்டிக்கின்றோம்.

கடந்த மாதம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அந்தோனியார் புரம் கிராம பகுதியில் உள்ள சோள மண்டல குளம் பகுதியில் உள்ள காணிகள் இவ்வாறு வெளிநாட்டில் இருந்து வந்த வருக்கும், கொழும்பில் இருந்து வந்தவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இப்பகுதிகளில் விவசாயம் செய்து வந்த மக்களுக்கு உண்மையை கூறாது அவர்களுக்கு வழங்கி உள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே உரிய அதிகாரிகள் தலையிட்டு மக்களுக்கு அக்காணியை பகிர்ந்தளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என அவர் தெரிவித்தார்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இளம் பட்டதாரி பெண் மரணம் தொடர்பான விசாரணை குழுவின் விசாரணை நிறைவு – தவறிழைத்தவர்கள் அடையாளம் காணப்பட்டனர்

## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவிப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (06-08-2024)




மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பட்டதாரியான இளம் தாய் ஒருவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட சுயாதீன விசாரணை குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் சம்பவ தினத்தின் போது சிலர் தவறிழைத்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவமானது கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது. மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த மரியராஜ் சிந்துஜா வயது (27) என தெரிய வந்துள்ளது.

குறித்த பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்த போக்கே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது. குறித்த மரணம் தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சினால் சுயாதீன விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளது. விசாரணைகளின் அடிப்படையில் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைக் குழு ஒன்று மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

குறித்த பெண் மரணமடைந்ததை தொடர்ந்து உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மத்திய சுகாதார அமைச்சின் விசாரணைகள் முடிவடைந்தவுடன் தவறிழைத்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

### கொலை அச்சுறுத்தல்

மேலும் குறித்த பெண்ணின் மரணம் தொடர்பாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து எனது தொலைபேசிக்கு பல்வேறு அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த அச்சுறுத்தல் குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# மன்னார் நீதிமன்றத்தினால் விடுதலையான வைத்திய அர்ச்சுனாவுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூடி அமோக வரவேற்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (07-08-2024)

மன்னார் நீதிமன்றத்தினால் 7ம் திகதி அன்றைய தினம் புதன் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட வைத்தியர் அர்ஜுனாவிற்கு மன்னார் மாவட்ட மக்கள் அமோக வரவேற்பை வழங்கினர்.

கடந்த வெள்ளிக்கிழமை (2) இரவு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையினுல் அத்து மீறி நுழைந்து கடமைக்கு இடையூரை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மன்னார் போலீஸ் நிலையத்தில் வைத்தியசாலை தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து வைத்தியர் அர்ச்சுனா மன்னா போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வைத்தியர் சனிக்கிழமை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது அவரை 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது வைத்தியர் அருச்சுனா மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

வைத்திய சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அண்ரன் புனித நாயகம் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இதன் போது மன்னார் நீதவான் நிபந்தனையின் அடிப்படையில் தலா 50,000 ரூபாய் இரு சரீர பிணையில் செல்ல அனுமதித்தார்.

இந்த நிலையில் மன்றில் இருந்து வைத்தியர் வெளியேறிய போது மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி வரவேர்த்தனர்.

பின்னர் மன்னார் மாவட்ட மக்கள் வைத்தியரை மன்னார் பொது விளையாட்டு மைதான பகுதிக்கு அழைத்துச் சென்று மாலை அணிவித்து தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவமானது கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த மரியராஜ் சிந்துஜா வயது (27) என தெரிய வந்துள்ளது.

குறித்த பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்த போக்கே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது.



இந்த நிலையிலேயே வைத்தியர் அர்ச்சுனா மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் அங்கு கடமைக்கு இடையூரைக்கு ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# மன்னார் சதோச மனித புதை குழி பகுதியை பரிசோதனை செய்ய தீர்மானம்

- எஸ்.ஆர்.லெம்பேட் (07-08-2024)

மன்னார் "சதோச" மனித புதை குழி தொடர்பிலான வழக்கு 07-08-2024 அன்றைய தினம் புதன் கிழமை மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் கலந்துரையாடல் வடிவில் குறித்த வழக்கு விவாதிக்கப்பட்டது.

இதன் போது அகழ்வுக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ஸ, பேராசிரியர் ராஜ்சோம தேவ்,காணாமல் போனோர் சங்க பிரதிநிதிகள், OMP அலுவளக பிரதிநிதிகள் உள்ளடங்கியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது நீதி மன்றத்தால் பல்வேறு கட்டளைகள் ஆக்கப்படிருந்தது குறிப்பாக பேராசிரியர் ராஜ்சோம தேவ் தலைமையில் சதோச மனிதபுதைகுழி பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஸ்கான் பரிசோதனை செய்ய வேண்டும் எனவும், சதோச மனித புதை குழியில் மீட்கப்பட்ட என்புகள் மற்றும் பிற பொருள் மாதிரிகளை வெவ் வேறாக பிரிப்பாதற்கான தீர்மானமும் அத்துடன் என்புகளை பால் வயது மரணத்திற்கான காரணம் தொடர்பில் ஆரய்வதற்கான செய்ற்பாடுகளை முன்னெடுக்குமாறும் அதே நேரம்.

ஏனைய சான்று பொருட்களை பேரசிரியர் ராஜ் சோம தேவிடம் கையளிக்குமாறும் கட்டளை அக்கப்பட்டது.

குறித்த வழக்கு மேலதிக விசாரனைகளுக்காக அக்டோபர் மாதம் திகதியிடப்பட்டுள்ளது.



# மன்னார் மாவட்ட விளையாட்டு துறை அபிவிருத்தி தொடர்பாக அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்



- எஸ்.ஆர்.லெம்பேட் (08-08-2024)

மன்னார் மாவட்டத்தின் விளையாட்டு துறையில் அபிவிருத்தி செயல்பாடுகளினை முன் னெடுப்பதற்காகவும், எதிர் காலத்தில் விளையாட்டுத்துறையினை மேம்படுத்தி சிறந்த முறையில் நடாத்தி செல்வதற்குமான கலந்துரையாடலானது மாவட்ட செயலாளர் க.கணகேஸ்வரன் தலைமையில் 08-08-2024 அன்று மாவட்ட செயலகத்தின் மருதம் மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணி அளவில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்டத்தின் விளையாட்டு துறையின் பிரதி நிதித்துவம் வழங்கும் வகையில் பிரதேச செயலாளர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மேலும் பல்வேறு விளையாட்டுத் துறையினை மேம்படுத்து முகமாக ஒவ்வொரு விளையாட்டுத் துறைக்குமான பொறுப்பான குழு உறுப்பினர்கள் இன்றைய தினம் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இளம் தாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வைத்தியசாலை தரப்பு ஒத்துழைக்க வேண்டும்

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன்

(06-08-2024)



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இளம் தாய் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியும், நியாயமும், கிடைக்க வைத்தியசாலை தரப்பினர் நீதியுடன் நடந்து கொள்வோம் என கூறுகிறார்கள். அவர்கள் கூறுகின்ற வார்த்தை உண்மையாக இருந்தால் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் 06-08-2024 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஊடக சந்திப்பு இடம் பெற்றது.குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் சட்டத்தரணி பா. டெனிஸ்வரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் மற்றும் உயிரிழந்த பெண்ணின் கணவர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற மரியராஜ் சிந்துஜா (வயது-27) வின் மரணத்தை தொடர்ந்து அவரது கணவர் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் கவனத்திற்கு உடன் கொண்டு வந்த நிலையில், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

வைத்தியசாலை தரப்புடன் உடனடியாக தொடர்பு கொண்டு, குறித்த விடயம் தொடர்பாக அவர்களிடம் வலியுறுத்தி தொடர்ந்தும் விசாரனைகள் சம்மந்தமாகவும் ஒவ்வொரு நாளும் விசாரித்து வருகிறோம்.

உள்ளக ரீதியான வைத்தியசாலையின் விசாரனைகள் நிறைவடைந்துள்ளன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசாரனைகளும் நிறைவடைந்துள்ளன. வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் விசாரனைகளும் நிறைவடைந்துள்ளன.

கள அறிக்கையும் முடிவடைந்துள்ளன. நான்கு விதமான முதல் கட்ட விசாரணை தற்போது முடிவடைந்துள்ளது. அடுத்த கட்டமாக மத்திய சுகாதார அமைச்சினால் இவ்வாரம் மன்னார் மாவட்ட டிபாது வைத்தியசாலைக்கு விசாரனைக்குழு வருகை தந்து முதல் கட்ட விசாரணைகளை முன்னெடுக்க உள்ளனர்.

இடம் பெற்ற நான்கு கட்ட விசாரணைகளின் போது சில நபர்கள் குற்றவாளிகளாக, குற்றம் சாட்டப்பட்ட கூடியவர்களாக சம்பவ தினத்தன்று கடமையில் இருந்தவர்கள் அசட்டை யினமாக நடந்து கொண்டுள்ளார்கள் என சிலரை அடையாளமிட்டுள்ளார்கள்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இரு வேறு தரப்பாக வைத்தியர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சும், ஏனையவர்களுக்கு வடமாகாண சுகாதார அமைச்சுக்கும் வைத்திய தரப்பினராலும், ஏனைய விசாரணை தரப்பினராலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆகவே பரிந்துரைக்கப்பட்டவர்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். நோய் வாய் பட்ட நிலையில் அவர் வைத்தியசாலைக்கு வரவில்லை.

சாதாரண ஒரு விடையத்தை கூட அவர்களின் கவனயீன மான செயல்பாடு ஒரு மரணத்தை ஏற்படுத்தியுள்ளது. 15 நாட்களை கொண்ட பிள்ளையின் தாய் மரணிப்பது என்பது பிறந்த பிள்ளையின் எதிர் காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

எனவே வைத்தியத்துறை இவ்வாறான மோசமான நிலைப்பாட்டிற்கு தார்மிக பொறுப்பேற்க வேண்டும். எனவே தொடர்ச்சியாக சாட்டுப்போக்கு பதில்களை கூறி எடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைக்கு அமைவாக செயல்படாமல் விடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த காலங்களில் கூட மருத்துவத்துறைக்கு எதிராக தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கிளிநொச்சியில் பெண்ணின் கர்ப்பப்பை அகற்றப்பட்ட விசாரணை அப்படியே காணாமல் போய் விட்டது. யாழ்ப்பாணத்தில் சிறுமி ஒருவரின் கை அகற்றப்பட்ட மை தொடர்பான விவகாரம் பேசு பொருள் அற்று போய்விட்டது. வவுனியா விவகாரமும் காணாமல் போய் விட்டது.

கிளிநொச்சியில் கொரோனா வைத்தியசாலையில் பல லட்சம் ரூபாய் ஊழல் என நிரூபிக்கப்பட்டு பெயர் குறிப்பிட்ட நபர்கள் மீது விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என விசாரணை குழு நியமிக்கப்பட்ட போதும் இன்று வரைக்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.குற்றம் சாட்டிய நபரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்தனர்.

மன்னார் வைத்தியசாலையிலும் கடந்த காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அதற்கு எதிராக நாங்கள் போராட்டங்களை முன்னெடுத்து குறிப்பிட்ட காலங்களில் இவ்வாறான ஒரு சம்பவங்கள் இடம் பெறாத வகையில் தடுத் திருந்தோம். எனினும் அவர்களின் கவனயீனமான செயல்பாடுகள் இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது. தற்போது வைத்தியசாலையில் 61 வைத்தியர்கள் உள்ளனர்.

56 வைத்தியர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். 5 வைத்தியர்களே மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். மன்னார் மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான வைத்தியர்கள் வெளி மாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர். எனவே நீங்கள் மீண்டும் மன்னாரிற்கு வந்து மன்னார் மாவட்டத்தில் குறைந்த வருடங்களாவது கடமையாற்ற வேண்டும். அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

மன்னார் மாவட்ட வைத்தியர்கள் மன்னாரிற்கு பணிக்காக வருகிறது இல்லை. அதன் விளைவாக வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து பணி செய்கின்ற நிலை உள்ளது. எனவே இந்த நிலையை மன்னார் வைத்தியர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும். விசாரணை முழுமை பெற சில நாட்கள் காத்திருக்க வேண்டும். விசாரணை நிறைவடைந்து வைத்தியசாலை தரப்பினராலும், மத்திய சுகாதார அமைச்சினாலும் எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றது என்பதற்காக நாங்கள் சில நாட்கள் காத்திருக்கின்றோம்.

குறித்த பெண்ணின் உடற்கூறு அறிக்கை இன்னும் வரவில்லை.

குறித்த அறிக்கையும் இவ் வாரம் வெளிவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையும் வெளிவந்த பின்னர் 3 அல்லது 4 நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்குவதற்கான வழி ஏற்படுத்த வேண்டும்.இல்லை என்றால் நாங்கள் நீதிமன்றத்தை நாடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம்.

மேலும் உயிரிழந்த பெண்ணுக்கு இழப்பீட்டையும் குறித்த குழந்தையின் எதிர்காலத்திற்கான வழி வகையையும் ஏற்படுத்த வேண்டும்.

அவர்கள் நஷ்ட ஈட்டையும் வழங்க முன்வர வேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியும், நியாயமும், கிடைக்க வேண்டும். வைத்தியசாலை தரப்பினர் நீதியுடன் நடந்து கொள்வோம் என கூறுகிறார்கள். அவர்கள் கூறுகின்ற வார்த்தை உண்மையாக இருந்தால் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

# எமது மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்? மாகாணசபைத்தேர்தலுக்கு பிரேரணை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்....

## சமூக வலைத்தளத்தில் ஒரு மனிதநேயமுள்ள குமுறல்



இங்கே மக்களுக்கு அநீதி நடைபெற்றக்கொண்டிருக்கிறது, அது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் ஆக்கபூர்வமானதாக இல்லை.

எமது மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்? மாகாணசபைத்தேர்தலுக்கு பிரேரணை போட்டுக்கொண்டிருக்கிறார்கள் இன்னும் ஒருதரப்பு பொது வேட்பாளர தேடிட்டு இருக்கு. இன்னும் ஒரு தரப்பு புறக்கணிக்க சொல்லி நோட்டிஸ் கொடுக்குது.

மாகாணசபை இயங்கியபோது பிரதிநிதிகளாக உள்ளவந்த வைத்தியர்கள் தமது மக்களுக்கக செய்தது என்ன? அவர்கள் தங்கள் வன்னி மாவட்ட வைத்திய சாலைகளில் ஒரு CT scan இயந்திரத்தை கூட பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கவில்லை ஆனால் அவர்களது சொந்த தனியார் வைத்திய சாலைகளில் CT scan வசதி வைத்திருக்கின்றனராம் இவை தான் மக்கள் பிரதிநிதிகளின் சீத்துவம்.

மன்னார், முல்லத்தீவு மாவட்ட வைத்திய சாலைகளில் இன்னும் Intern வசதி இல்லையாம் இன்ரேன் அனுமதிப்பதாயின் நிரந்தர வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்படவேண்டுமாம். தற்போது தற்காலிக வைத்திய நிபுணர்களே கடமையாற்றுவதாக அறிய முடிகிறது. உண்மையில் இந்த மாவட்டங்களை சேர்ந்த மக்கள் தங்களுக்கான தரமான தடை இன்றிய மருத்துவ வசதியை பெறுவதற்கான உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதையெல்லாம் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் இதுவரை கவனத்தில் எடுக்காதிருக்கின்றனர். ஆனால் முள்ளிவாய்க்காலுக்கு விளக்கு கொழுத்த மட்டும் முண்டியடிக்கின்றனர்.

அங்கே ஒரு குழந்தை தன் தாயை ஒரு சிலரின் கவனக்குறைவாலும் அசமந்தத்தினாலும் இழந்து பாலுக்காய் அழுதுகொண்டிருக்கிறது அதைப்பற்றி எந்த அரசியல்வாதி கவலைப்பட்டான்?

இதுவரை எத்தனை பிரதிநிதிகள் அந்த குழந்தையின் வீட்டுக்கு சென்றனர்?

உயிரின் விலை அவ்வளவு மலிந்துவிட்டதா? கொஞ்சம் கொஞ்சமாக குருதி வடிந்து கொஞ்சம் கொஞ்சமாக கொல்லப்பட்ட அந்த இளம் தாய் எந்த உதவியுமின்றி மல சல கூடத்தில் குருதியை தண்ணீரில் கழுவி கழுவி கொண்டிருக்க இங்கே தாதியர்கள் கைத்தொலைபேசியில் கலந்து மகிழ்ந்து கொண்டிருந்திருக்கின்றனரே.

இவர்கள் இன்னும் ஒரு தாயின் வலியில் பிறந்தவர்கள் என்பதை ஏன் மறந்து விட்டிருந்தனர்? உங்களுக்கு விருப்பமில்லாத வேலையை ஏன் செய்கிறீர்கள்? இவ்வாறான ஆட்களை கண்டிக்கும் நவடிக்கை எடுக்காமல் பாதுகாப்பு கொடுக்கும் அதிகாரிகளும் கொடூரமானவர்களே.

இலங்கையில் இன்னும் ஒரு அலட்சியக்கொலை இடம்பெறுவதை இதற்கு மக்கள் செய்யும் எதிர்வினை நிறுத்தவேண்டும். நாளை உங்கள் வீட்டில் இது நடந்தபின் சித்தித்து பலனில்லை.

இதன் பிறகும் இவற்றை எல்லாம் நியாயப்படுத்திக்கொண்டு நிர்வாகம் செய்யும் எவரும் காருண்யம் அற்ற காட்டுமிராண்டிகளே!

# தமிழ் பொது வேட்பாளர் யார்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



தமிழ் மக்களின் கவனம் மருத்துவர் அர்ச்சுனாவிலிருந்து ஓரளவுக்கு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கித் திரும்பியிருக்கிறது. பெரும்பாலும் இக்கட்டுரை பிரசுரிக்கபடுகையில் யார் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது தெரிய வந்துவிடும். இதை இன்னும் அழுத்தமாகச் சொன்னால் பொதுமக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச்சபையும் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பினால் தெரிவு செய்யப்பட்ட பொது வேட்பாளர் யார் என்பது பெரும்பாலும் தெரிய வந்திருக்கும்.

கடந்த சில வாரங்களாக யார் அந்தப் பொது வேட்பாளர் என்பது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் தொடர்ந்து நடந்து வந்தன. ஊடகங்கள் ஊகங்களையும் கற்பனைகளையும் எழுதின. சில ஊடகவியலாளர்கள் பொதுக் கட்டமைப்பின் இயலாமை குறித்து கேள்விகளை எழுப்பினர். இவ்வளவு காலமாகத் தேடியும் ஒரு பொது வேட்பாளரை கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறார்கள் என்றெல்லாம் விமர்சித்தனர்.

தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த அரசியல் விமர்சகர்கள் கடந்த பல மாதங்களாக தாங்கள் எழுதி வரும் கட்டுரைகளிலும் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் கருத்துக்களிலும், ஒரு பொது வேட்பாளர் ஒரு பொதுவான ஆளாக இருப்பார் என்று தான் கூறி வந்தார்கள். அவர் ஓர் அரசியல்வாதியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை, அவர் ஒரு குறியீடு மட்டுமே, அவர் ஒரு பிரபல்யமாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை என்று கூறி வந்தார்கள். ஆனால் அவ்வாறான ஒருவரைத் தமிழ்ச் சமூகத்தில் தேடிக் கண்டுபிடிப்பதற்கு ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருந்தது?

ஏனென்றால், தமிழ் மக்கள் சிதைந்து போய்விட்டார்கள். தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்களை ஒருங்கிணைக்கவல்ல தலைவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பொதுநிலைப்பாட்டை எடுத்து அந்த பொதுநிலைப்பாட்டுக்கு தலைமை தாங்கவல்ல தலைவர்கள் இல்லாமல் போய் விட்டார்கள். இன்னும் ஒரு படி மேலே போய்ச் சொன்னால், மக்களை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியம் மிக்க தலைவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். இது தமிழ் அரசியலின் மிகச் சீரழிவான நிலைமையைக் காட்டுகின்றது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு தமிழ்ப் பொது நிலைப்பாட்டை எடுத்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை அதற்காக தேடுவது என்பது கடினமானது தானே? அதுதான் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கு வந்த சோதனையும்.

அரசியலில் மட்டுமல்ல வாழ்க்கையில் எல்லாவற்றிலுமே 100% முழுமையை எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர் தமிழ்ப் பொது நிலைப்பாட்டைக் குறிப்பவர். தமிழ்ப் பொதுநிலைப்பாடு என்பது தமிழ்த் தேசிய நிலைப்பாடுதான். தமிழ்த் தேசிய நிலைப்பாடு என்பது தமிழ் மக்களை இன்று பிரித்து வைத்திருக்கும் அல்லது சிதறடித்து வைத்திருக்கும் எல்லா அம்சங்களுக்கும் அப்பால் ஒரு தேசமாகத் திரட்டுவது. அவ்வாறு தமிழ் மக்களை ஒன்றாகத் திரட்டுவதற்குரிய ஓர் அரசியல்வாதியை 100% பொருத்தமாக கண்டுபிடிப்பது கடினமானது. எனினும் இருப்பவற்றில் சிறந்தது, அல்லது தமிழ் மக்களை ஒன்றாகத் திரட்டுவதற்கு எது அவசியமானது? என்ற அளவுகோல்களின் அடிப்படையில் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் இவ்வளவு காலமும் தேட வேண்டியிருந்தது என்று தமிழ் மக்கள் பொதுச்சபையும் தமிழ் பொதுக் கூட்டமைப்பும் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதி அல்லாத ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற வாதம் தமிழ் மக்கள் பொதுச் சபைக்குள் வலிமையாக இருந்தது. கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தாத ஒருவரைத் தெரிவு செய்வது அவசியம் என்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது. அதேசமயம் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் காணப்படும் கட்சிகள் அந்த விடயத்தில் வேறுவிதமான பார்வையை கொண்டிருந்தன. வாக்குத் திரட்டக்கூடிய, ஒப்பீட்டளவில் பிரமுகராக இருக்கும் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டும் என்ற விருப்பம் கட்சிகளிடம் அதிகமாக இருந்தது. எனினும் பல்வேறு பெயர்கள் மேசையில் வைக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டன.

ஜனாதிபதித் தேர்தல் பொறுத்து தமிழ்ப் பொது கட்டமைப்புக்கு இருந்த சவாலான விடயம் என்னவென்றால், ஏதோ ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியில் தங்கியிருக்க வேண்டும், அல்லது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரில் தங்கியிருக்க வேண்டும். ஏனெனில் தேர்தல் சட்டங்களின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி ஒருவரை வேட்பாளராக நிறுத்தலாம். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுயேட்சையாகக் களமிறங்கலாம். எனவே இந்த இரண்டு விடயங்களிலும் ஏதோ ஒரு விகிதமளவுக்கு அரசியல்வாதிகள் அல்லது கட்சிகளைச் சார்ந்து சிந்திக்க வேண்டியிருந்தது.

ஒரு சிவில் சமூகப் பிரதிநிதியை பொது வேட்பாளராக நிறுத்துவது என்றால் அதற்கு ஒரு கட்சி வேண்டும். அந்த கட்சி பதிவு செய்யப்பட்ட கட்சியாக இருக்க வேண்டும். அதைவிட முக்கியமாக, அந்தக் கட்சியானது ஜனாதிபதி

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

கனடிய செய்திகள் Canadian News

# "அரங்கேற்றம் காணும் தனது மாணவிகளுக்கு உயர்ந்த தரத்தோடும் நடனங்களைக் கற்றுக் கொடுப்பவர் ஆசிரியை அற்புதராணி ஆவார்"

## அரங்கேற்றச் செல்வி கயல் ஜனனியின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் மதுரை முரளிதரன் அவர்கள் புகழாரம்

"நான் இதுவரை பல நூற்றுக்கணக்கான பரதநாட்டிய அரங்கேற்றங்களில் உரையாளராக அழைக்கப்பெற்றுள்ளேன். அரங்கேற்ற மேடைகளுக்குச் செல்லும் நடனச் செல்விகளுக்கு மட்டுப்படுத்தப்பெற்ற வகையில் உருப்படிகளையே ஆசிரிய ஆசிரியைகள் கற்றுக்கொடுப்பது வழக்கம். ஆனால் இன்றைய நிகழ்வில் அரங்கேற்றம் காணும் தனது மாணவிக்கு ஆர்வத்தோடும் உயர்ந்த தரத்தோடும் நடனங்களைக் கற்றுக் கொடுக்கும் பக்குவம் ஆசிரியை அற்புதராணி அவர்களுக்கு உள்ளது என்பதை நான் உணர்ந்தேன். இந்த அரங்கேற்றத்தில் நான் இதுவரை பார்த்து ரசித்த உருப்படிகளை அடிப்படையாக வைத்தே நான் இந்த உண்மையை உங்கள் மத்தியில் தெரிவிக்கின்றேன்".





இவ்வாறு அண்மையில் சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற அரங்கேற்றச் செல்வி கயல் ஜனனியின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மதுரை முரளிதரன் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

"அற்புத நர்த்தனாலயம்" நாட்டியப் பள்ளியின் அதிபர் ஸ்ரீமதி அற்புதராணி கிருபைராஜா அவர்களின் மாணவியான செல்வி கயல் ஜனனி செல்வகுமார் அவர்களின் அரங்கேற்றம் அன்று அழகுற இடம்பெற்றது.





அங்கு உரையாற்றிய உலகப் புகழ் பெற்ற நடனக் கலைஞர் மதுரை முரளிதரன் அவர்கள் தனது வாழ்த்துரையில் தொடர்ந்து தெரிவிக்கையில், "ஒரு நடனக் கலைஞருக்கு மிக அவசியமாக இருக்க வேண்டிய தகைமைகள் சிலவுண்டு. அவையாவன அங்க சுத்தம், அடவு சுத்தம், அழகிய பாபம், நினைவுத் திறன் மற்றும் இசைத் திறன் ஆகியவை தான். இவை அனைத்தும் ஒரு நடனக் கலைஞருக்கு எவ்வளவு அதிகமாக உள்ளதோ அந்தளவிற்கு அவர் தனது நடனப் பயணத்தில் வெற்றிகளை ஈட்டுவார். எனது அவதானிப்பில் இன்றைய எமது அரங்கேற்றச் செல்வி கயல் ஜனனி அவர்கள் இந்த தகைமைகள் அனைத்தையும் கொண்டவராக விளங்குவதை நான் அவதானித்தேன். எனவே அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. மேலும் பரதநாட்டியத்தை கற்றுக் கொள்ளவும் கற்பிக்கவும் வாய்ப்பு கிடைக்கும் அனைவருக்கும் அது ஒரு தவமாகவே கணிக்கப்பெறும்.



அத்துடன் நடனத்துறையில் முன்னேற்றத்தை அடைவதற்கு உள்ளம் - உடல் - உயிர் - அனைத்தையும் நாம் அர்ப்பணிக்க வேண்டும்." என்று தனது மனந்திறந்த உரையை மதுரை முரளிதரன் அவர்கள் ஆற்றிச் சென்றார். தனது உரையில் அன்றைய பக்கவாத்தியக் கலைஞர்களின் ஆற்றலையும் ஒத்துழைப்பையும் மனந்திறந்து பாராட்டினார்.

இங்கே காணப்படும் படங்கள் அரங்கேற்றச் செல்வி கயல் ஜனனி அவர்கள் அரங்கேற்றத்தில் எடுக்கப்பட்டவையாகும்.

**- சத்தியன்**



# மீண்டும் ஆளத் துடிக்கும் "ராஜபக்சக்கள் குடும்பம்"

**"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவது பொதுஜன பெரமுனவினதோ அதன் வேட்பாளர் நாமல் ராஜபக்சவினதோ இலக்கு அல்ல. தமது கட்சியை பாதுகாத்து எம்.பி.க்களை தக்கவைப்பதுடன் ஆதரவாளர்களுக்கும் புத்துணர்வூட்டும் அதேவேளை பொதுஜன பெரமுனவை உடைத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி கொடுப்பதுடன் எதிர்கால ஜனாதிபதியாக வடிவமைக்கப்படும் நாமல் ராஜபக்சவை வெள்ளோட்டம் விட்டுப்பார்க்கும் முயற்சியாகவும் மஹிந்த தரப்பு இந்த தேர்தலை பயன்படுத்த நினைக்கின்றது."**

**- கே. பாலா**

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ள நிலையில் ஜனாதிபதி கதிரையை கைப்பற்றுவதற்கு பலமுனைப்போட்டி ஏற்பட்டுள்ளது மட்டுமன்றி என்றுமில்லாதவாறு இம்முறை பிரபல வேட்பாளர்கள் பலர் களமிறங்கியுள்ளதால் தேர்தல் களத்தில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்பதுடன் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதனைக்கூட கணிக்க முடியாத ஜனாதிபதித் தேர்தலாகவும் மாறிப்போயுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தொலைபேசி சின்னத்திலும் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க திசைகாட்டி சின்னத்திலும் களமிறங்குவதுடன் ராஜபக்ச சகோதரர்களின் குடும்பக்கட்சியான பொதுஜன பெரமுனவிலிருந்து "தாமரை மொட்டு" சின்னத்தில் குடும்பவாரிசாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூத்த மகனும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான நாமல் ராஜபக்ச களமிறங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை தற்போதுவரை இருந்த தேர்தல் கள நிலைமைகளை புரட்டிப்போட்டுள்ளது.

இவர்கள் மட்டுமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாற்றுக்குழுவின் சுயேட்சை வேட்பாளராக முன்னாள் நீதி அமைச்சரும் எம்.பி.யுமான விஜேதாஸ ராஜபக்ச, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்'ல் சரத் பொன்சேகா மற்றும் தமிழ்மக்கள் சார்பில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் எனப் பல பிரபலங்கள் இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் களமிறங்குவதால் தான் இம்முறை ஜனாதிபத் தேர்தல் பலமுனைப்போட்டியாக மாறியுள்ளது.

ஏற்கனவே இந்த நாட்டை ஆட்சி செய்து அழித்த நிலையில் மக்கள் போராட்டத்தினால் விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்சக்கள் நாட்டில் தலைமறைவாக திரிந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை கொடுத்த புண்ணியத்தினால் மக்களுக்கு தலை காட்ட முடிந்த நிலையில் தற்போது மீண்டும் ஆளத்துடிக்கும் ஆசையினாலும் கட்சியை பாதுகாக்க வேண்டியதேவையினாலும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக, மஹிந்த வாரிசாக சமல், கோத்த, பசில் ராஜபக்சக்களின் பெறாமகனாக நாமல் ராஜபக்ச களமிறங்குகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எப்படி பண்டாரநாயக்க குடும்பத்துக்கு சொந்தமானதாகவிருந்ததோ ஐக்கிய தேசியக்கட்சி எப்படி சேனநாயக்கவின் குடும்பத்துக்கு சொந்தமானதாகவிருந்ததோ அதேபோன்றே ராஜபக்ச குடும்பத்துக்காகவே இந்த தாமரை மொட்டு சின்னத்தைக்கொண்ட பொதுஜன பெரமுன கட்சி மகிந்த ராஜபக்சவினால் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஜனாதிபதி வேட்பாளராக தற்போது நாமல் ராஜபக்சவும் அறிவிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் இலங்கையில் குடும்ப ஆட்சி, குடும்ப அரசியல் தற்போதைக்கு முடிவுக்கு வரப்போவதில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் குடும்ப ஆதிக்கம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழான பழைய சட்ட சபைக் காலத்திலிருந்தே தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் டி.எஸ்.சேனநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் மகன் டட்லி சேனநாயக்காவும் மருமகன் சேர் ஜோன் கொத்தலாவலையும் பிரதமர்களாகப் பதவி வகித்தனர். ஐக்கிய தேசியக்கட்சியின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கவின் அமைச்சரவையில் விவசாய அமைச்சராக அவரது மகன் டட்லி சேனநாயக்க இடம்பெற்றதுடன் தந்தைக்குப் பின் பிரதமராகவும் பணியாற்றினார். இவர் பிரமச்சாரி. .டட்லியின் மறைவையடுத்து ஐ.தே.க.வின் தலைமைத்துவத்தை ஜே.ஆர்.ஜெயவர்தன கைப்பற்றிய பின்னரே சேனநாயக்க குடும்பத்தின் அரசியல் ஆதிக்கம் அஸ்தமித்தது.

எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் 2005 ஆம் ஆண்டு வரை அவரது குடும்பத்தின் ஆதிக்கத்திலேயே இருந்தது. பண்டாரநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆதிக்கத்திலும் அடுத்து மகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்காவின் ஆதிக்கத்திலும் இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மறைவின் பின்னர் அவரது மனைவி சிறிமாவோ பண்டார நாயக்க பிரதமராகவும் மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க, ஜனாதிபதியாகவும் மகன் அனுர பண்டாரநாயக்க அமைச்சர் மற்றும் சபாநாயகர் பதவிகளையும் மைத்துனர் அனுருத்த ரத்வத்த பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி வகித்த நிலையில் அனுருத்த ரத்வத்தவின் மகன் லொகான் ரத்வத்த தற்போது இராஜாங்க அமைச்சராக உள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 2005 ஆம் ஆண்டே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கத்திற்குள் வந்தது. பின்னர் 2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்சவின் கைகளிலிருந்து பறிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் கைகளுக்கு வந்து இன்று தலைவர் யார் என்றே தெரியாத தத்துப் பிள்ளையாகவுள்ளது.

முதல் முதலாக 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவானவுடன் சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றியதையடுத்து கட்சிக்குள்ளும் ஆட்சியதிகாரத்திலும் அவரது குடும்பத்தவர்களின் அரசியல் செல்வாக்கு முன்னைய அரசியல் ஆதிக்கக் குடும்பங்கள் காட்டியிராத அளவுக்கு முனைப்புப் பெற்றது. 2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றவுடனேயே மகிந்த ராஜபக்ச தனது பரம்பரையின் அரசியல் வாழ்வு பற்றிய பெருமைகளை நினைவூட்டத் தொடங்கினார். ராஜபக்ச குடும்ப ஆட்சி கோலோச்சத்தொடங்கியது.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக பசில் ராஜபக்ச சபாநாயகராக சமல் ராஜபக்ச, பாதுகாப்பு அமைச்சின் செயலராக கோத்தபாய ராஜபக்ச என சகோதரர்கள் ஆட்சி நடத்த, மஹிந்த ராஜபக்சவின் மகனான நாமல் ராஜபக்ச அமைச்சராகவும், சமல் ராஜபக்சவின் மகனான சசீந்திர ராஜபக்ச இராஜாங்க அமைச்சராகவும் ராஜபக்சக்களின் சகோதரியின் மகனான நிபுண ரணவக்க பாராளுமன்ற உறுப்பினர் எனப் பதவி வகிக்க, இவர்களின் குடும்ப உறவுகள் ஏனைய அதிகாரங்களையும் துறைகளையும் திணைக்களங்களையும் பங்கு போட்டுக்கொள்ள ராஜபக்ச குடும்ப விருட்சம் கிளை விட்டுப் பரவியது.

இந்நிலையிலேயே தனது தந்தையும் அரசியல்வாதியுமான ராஜபக்ச பரம்பரையின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிடவேண்டுமென முடிவெடுத்த ராஜபக்ச சகோதரர்கள் அதற்காக நன்கு திட்டமிட்டு தமது தாய்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உடைத்து பொதுஜன பெரமுன என்ற கட்சியை உருவாக்கி அதன் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்ச ஏற்றுக்கொண்டார். 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினால் தான் மீண்டும் ஜனாதிபதியாக முடியாது என்பதினாலேயே தனது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருமான கோத்தபாய ராஜபக்சவை தனது குடும்பத்தின் கட்சியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கடந்த 2019 ஜனாதிபதித்தேர்தலில் தாமரை மொட்டு சின்னத்தில் களமிறக்கி வெற்றி பெற வைத்தார்.

ஆனால் ராஜபக்ச குடும்பத்தின் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியில் இராணுவ சர்வாதிகாரம். ஊழல், மோசடிகள், மனித உரிமை மீறல்கள். அடக்குமுறைகள் அதிகரித்துப்போனதால் பொறுமையிழந்த மக்கள் வீதிக்கிறங்கிப்போராடியதினால் 2022 ஆம் ஆண்டு ராஜபக்சக்களின் குடும்ப ஆட்சி முடிவுக்கு வந்து ஜனாதிபதியாக விருந்த கோத்தபாய ராஜபக்ச பதவியிலிருந்து நாட்டிலிருந்தும் தப்பியோடினார். பிரதமராக மஹிந்த ராஜபக்சவும் நிதி அமைச்சராகவிருந்த பசில் ராஜபக்சவும் பதவிவிலக ஏனையவர்களான சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, சசீந்திர ராஜபக்ச ஆகியோர் பதவி இழக்க, ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

இவ்வாறான நிலையில் மக்களிடமிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள ஐக்கியதேசியக் கட்சியின் தலைவராக பாராளுமன்றத்தை தேசியப்பட்டியல் எம்.பியாக பிரதிநிதித்துவப்படுத்திய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கி தம்மையும் தமது கட்சியும் ராஜபக்சக்கள் பாதுகாத்துக்கொண்டனர். எனினும் இரு தரப்புக்குள்ளும் முரண்பாடுகள் தொடர்ந்த நிலையில் ஜனாதிபதித்தேர்தலை நடத்த வேண்டிய காலம் நெருங்கியதினால் உள்ள முரண்பாடுகள் வெளிப்படையாக வெடித்தன. மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவைக்கோரிய நிலையில் அது நிராகரிக்கப்பட்டு தமது கட்சி சார்பில் தனி வேட்பாளர் இறக்கப்படுவார் என பொதுஜன பெரமுன அறிவித்தது.

இதனையடுத்து தான் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்பதற்காக ரணில் விக்கிரமசிங்க ஒரு பக்கத்தால் பொதுஜன பெரமுனவை உடைத்து 92 எம்.பி.க்களை தன்பக்கம் இழுத்துக்கொள்ள, மறுபக்கத்தால் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்திருந்த விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிருது ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, மற்றும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யுத்துகம அமைப்பு என்பனவும் பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறின.

அதுமட்டுமன்றி கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ராஜபக்ச சகோதரர்களின் பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்த பங்காளிக்கட்சிகளாகவிருந்த தற்போது அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம், அதாவுல்லா எம்.பி. தலைமையிலான தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட இன்னும் சில கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்க பக்கம் சென்று விட்டன.

(தொடர்ச்சி 19 பக்கம்)

# Grieving Mother of Missing Kin Summoned by Sri Lanka's "Terror Police"

## Relatives of Enforced Disappearances Intimidated and Lured with Compensation

A grieving mother searching for her missing kin for over a decade and a half and protesting peacefully was summoned and questioned by the Counter Terrorism Investigation Department (CTID) dubbed Sri Lanka's "Terror Police" by the Tamils and Muslims.

Grieving mothers, wives, and sisters have been continuously staging a peaceful protest for over 8 years now. They are searching for their near and dear who are victims of enforced disappearances either after surrendering, handed over, or abducted after the brutal civil war came to a bloody end.

While none of those who went missing after the war has been found to date. An official body the Office for the Missing Persons (OMP) created by an act of Parliament has not even found a single person reported missing, while the protesting mothers have time and again said they don't have faith in the OMP and have dismissed it as a sham.

Now, a leading member of the women-led protest group searching for their missing ones was summoned by the police for inquiry which has been strongly condemned by Civil Society Organisations and Tamil politicians.

Amalanayaki Amalraj, Batticaloa district President of the Association for the Relatives of the Enforced Disappearances in the North and Eastern Provinces (ARED) a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict was inquired for over three hours on the 30th of July. The same day she spoke to local media persons about the ordeal she faced during the inquiry by the police. Officials from the CTID office in Colombo were present in Batticaloa to question her. According to her, in the files and documents brought by the officials, she was identified as a terrorist.

"In the file sent by Colombo, I was fully portrayed as a terrorist. Their idea was to brand us as terrorists, thereby creating psychological pressure and forcing us to stop the protests carried on by us".

During the last week of June this year (2024), the ARED representatives of the 8 districts in the traditional Tamil homeland in the North and East took forward a simultaneous protest demonstration seeking the whereabouts of their relatives. Speaking at a common meeting on July 30th at Vavuniya, Sivananthan Jenita questioned the rationale of inquiring the grieving mothers under the draconian Prevention of Terrorism Act (PTA). She also pointed out that the Tamil mothers of the ARED were staging a democratic protest just seeking an answer to a simple question about the whereabouts of their children.

"The President of the Batticaloa district of our organization has been summoned by the CTID officials. Are we terrorists to be questioned under the PTA by the CTID? State oppression is being unleashed against us for seeking to know where our relatives are and staging a democratic protest for the same".

Mariasuresh Easwary, President of the Mullaitivu district ARED who led the protest in that district called upon all to cooperate in finding their loved ones rather than calling the mothers who are searching for their children for questioning at a meeting in Mullaitivu on the 31st of July.

"In every district, the CTID police are subjecting the women leading the protests to more than 4-5 hours of questioning. On the 30th of July president of the ARED in Batticaloa district Amalanayaki was questioned for 4 hours. Such intimidations continue to happen. Tactics like that should be stopped and everyone should cooperate to search and get back our relatives".

'Association with the annihilated LTTE'

Amalaraj Amalanayaki aka Vallipuram Amalanayaki says the officials of the CTID in Batticaloa questioned if she has any contacts with the LTTE which the government has claimed to have annihilated 15 years back.

"I was asked about my contacts with the LTTE, both locally and internationally. I replied saying it was they who told it's a banned organization or that organization doesn't exist. Also, I asked how the LTTE name crops up and it is for them to search it. We don't have any contact with anybody who comes calling themselves LTTE. We haven't seen that side too. It is for you to find out".

Diaspora Money?

Amalanayaki told local media persons she was questioned if the relatives searching for their relatives who are victims of enforced disappearance were receiving funds from the diaspora. CTID officers also inquired her from an angle if she was part of those trying to revive the LTTE.

"They asked if the diaspora was funding the protest. I replied saying they haven't done so far and told them they could provide such contacts if they have so. They were trying to portray me as a terrorist and one of the persons trying to revive the LTTE. Apart from that they felt such protests in the past were carried out with a view to discredit and defame the government. That seemed to be their opinion".

She points out the government believes such inquiries and intimidations of people since 2017 would deter them from continuing their protests demanding to know the whereabouts of their relatives and seeking accountability.

"Since they are under international pressure, they are trying to create a psychological pressure which will affect us. For example, when I am called for an inquiry this message will reach another four mothers. And, those mothers will move away from the protests due to fear. That's their only objective.

Amalanayaki expresses fear about her personal data right from her birth details and private details of her family members were being collected by the CTID officials. During her questioning she was shown six photos taken at various times during their protests and details about it, she further added.

Life valued at just LKR 200,000?

The President of the Trincomalee district ARED Sebastian Devi had warned on the 29th of July while protesting in front of the Human Rights Commission of Sri Lanka office in Trincomalee warned persons like Amalanayaki and other mothers who participated in the protests could be summoned and questioned by the CTID.

"They appointed Presidential Commissions and nothing happened. Today they have summoned the Batticaloa district president, tomorrow they could summon us also".

Participating in a protest on the 28th of July, Manuel Uthayachandra president of the Mannar district ARED questioned the OMP if the value of their children's life was just LKR 200,000.

"We are pouring our dismay on the streets, but none seems to bother about us. We are not sure if justice will be rendered to us. Every mother is losing their lives. When every mother dies the evidence also dies with her. That's exactly what the government wishes. When they constituted the OMP they brought in four mechanisms. What did they do to find out the truth? The OMP stresses only on compensation. They want the protesting mothers to receive the compensation and simply stay at home. Is the value of our children just two lakhs? We will give you four lakhs and you search and get back our children, that's what we are saying".

# East Public Vow to 'Continue Protest' till Solar Project is Stopped

## Batticaloa Villagers 'Not to Stop Protest' Until Solar Project is Scrapped

A village in Sri Lanka's eastern district of Batticaloa has vowed to continue its protest until the country's first solar power plant is shut down completely.

The solar power plant was installed to generate power for agricultural use as the island nation continues to struggle with power generation and distribution.

Villagers from the Navarkadu village under the Vavunathivu divisional secretariat began their protest on the 29th of July saying the solar plant will deprive them of their livelihoods and cause irreversible environmental damage.

Nearly 300 families live in Navarkadu and the solar plant installed in 2019 on a 3o acre land is just 500 meters from the village. Locals now say an additional 30 acres of land has been acquired within 100 meters of their dwellings for expanding the power generating plant.

Cattle farming is the primary livelihood of those living in Navarkadu. They point out that continued expansion like this would deprive them of the grazing lands for their cattle thereby affecting their income and day-to-day lives. The villagers also expressed fears that their health may be affected by radiation from the power plant. Locals say their eyesight may be affected apart from skin diseases.

The villagers say acquiring additional land for the solar plant would put them under enormous social pressure as land would become scarce in the future, to build new houses as families expand. They say such a situation will force their blood relations to relocate elsewhere for a living and build houses.

Navarkadu villagers have been protesting since 3rd March this year and till the 29th of July local villagers have had at least four meetings with the Divisional Secretary of Vavunativu and other officials but with no result. During the meeting, the villagers say they have apprised the officials of the present and future crises they have to face due to the expansion of the solar power plant.

Now, Navarkadu villagers say they will continue their protest till the solar project is stopped.

"Dwelling has increased in the area. If the solar power plant is taken forward lands closer to the houses would be acquired for this. If so, then we will be forced to leave the village. Also, our cattle would be deprived of their grazing lands and fodder which has already happened. We are totally opposed to this. Our protest will continue till the plant is dismantled from here" a villager told local journalists.

The villagers have also handed over a petition containing their demands to the Vavunativu Divisional Secretary once again.

Local journalists say the DS assured the Navarkadu villagers the issues they face would be brought to the notice of the concerned higher officials.

First Solar Plant

Sri Lanka's first solar plant for providing power for farming was installed and inaugurated on the 11th of October 2022 at Vavunativu in Batticaloa district.

Energy minister Kanchana Wijesekara on the inaugural day said the solar power plant was a joint venture investment by WindForce and Vidu Lanka & Hi Energy.

Investors believe this solar power plant would add 20 Gigawatts of electricity to the National Grid annually, Kanchana Wijesekara added when the plant was inaugurated.

# ஸ்ரீ அருள்மிகு கற்பகவிநாயகர் தேவஸ்தானம்- பிரம்ரன்





## ஸ்ரீ நாராயண பெருமாள் அலங்கார உற்சவம் 2024

ஸ்ரீநாராயணப் பெருமாளின் அலங்கார உற்சவம் இலங்கை பொன்னாலை ஸ்ரீவரதராஜ பெருமாள் பட்சமாக ஆவணி ரோகினி நன்னாளை தேர்த்திருவிழாவாக வைத்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி வரை நடைபெறும். 01ம் நாள் (11 -8 -2024 ) ஞாயிற்றுக்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பம் 05ம் நாள் (15-08-2024 ) வியாழக்கிழமை சப்பரத் திருவிழா, 06ம் நாள் (16-08- 2024 ) வெள்ளிக்கிழமை வரலக்ஷிமி பூஜை, 10ம் நாள் (20-08-2024 ) செவ்வாய்கிழமை மஞ்சத் திருவிழா 17ம் நாள் (27-08-2024) செவ்வாய்கிழமை காலை தேர்த்திருவிழா 18ம் நாள் (28-08-2024) புதன்கிழமை காலை தீர்தத்திருவிழாவோடு
ஸ்ரீ நாராயணப்பெருமாள் அலங்கார உற்சவம் பூர்த்தியாகும்.
இவ்வலங்கார திருவிழாக் காலங்களில்
சகல அடியார்களும் ஆலயத்திற்கு வருகை தந்து
காத்தருளும் கண்ணபிரானின்
நல்லருள் பெற்றுய்வீர்களாக.




## விநாயகர் சதுர்த்தி (ஆவணி சதுர்த்தி)

## 06-09-2024 (ஆவணி மாதம் 6ஆம் திகதி) வெள்ளிக்கிழமை

*காலை 09 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் பால்க்குட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விஷேட பூஜையும், மாலை மூலமூர்த்திக்கு விஷேட அலங்கார பூஜையையும் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு விஷேட சஸ்ரநாம அர்ச்சனையும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் திருக்காட்சியும் சிறப்பாக நடைபெறும்.*

*காலையில் நடைபெறுகின்ற சங்காபிஷேகத்தின் போது பால்குடம் எடுக்க இருக்கின்ற அடியார்கள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவினை மேற்கொள்ளவும்*

UNIT 01 200 ADVANCE BLVD
BRAMPTON ON L6T 4V4
905 458 9701 / 416 471 0255

*என்றும் இறை பணியில் நிற்கும்*
*கனகுக சிவத்தொண்டர்*
*திரு இரா விஜயநாதன்*


Arrow Master Inc
All services are in one Roof
Arrow Immigration service
Providing trusted Immigration Services through Experience & Proven Methods Our Services
• Immigration Assessment
• LMIA (Labor Market Impact Assessment)
• Family Class Sponsorship
• Business Immigration
• Temporary Resident Visa (visit, study or work)
• Citizenship Applications
• Permanent Residence Renewal
• Express Entry/Refugee
• Translation Services
• All kind of immigration Counsulting
• Pardons
• Tickets
• Global travel.
Event Photo & Videography
Portrait Photography
Drone Photography
Outdoor Shooting
Event Albums
ARROW STUDIO
Professional Photographers
Take photo for your
Permanent Residence cards
Status Cards
Student ID Cards
Canadian Citizenship
Medical photo
Passport
Lamination
Copy
HEALTHY FOOD
THATHTHA
Order now!
Veg. Buriyani - full
Fresh Fruit juices
Home made String hoppers
Home made Puttu
Fresh Appam
Purple yam dessert
Gram dessert
Energy Balls
Fox Millet honey
Millet porridge
Butter Milk - Mor
Rice Porridge
Healthy Food for Healthy Life
Our services
Take out
Catering Service
Are you planning a special event? Whether it's a wedding, corporate function, or family celebration, THATHTHA Catering is here to provide exquisite food and impeccable service.
(437) 880-9000 | (416) 357 9250
ஓம்
சரவணபவ
கனடா கதிர்காமம் தியான பீடம்
கந்தனென்ற பெயர்சொன்னால் முந்தைவினை அகலும் கதிர்காமக் கந்தனவன் கனடாவில் வந்தமர்ந்தான் எண்ணியவை சித்திக்க வேலனாய் அருள்புரிவார்
Pooja Every day 12.00pm
Tuesday & Friday Special poojas
If you like to make special poojas, please contact CKYMC
437-880-9000 | 416-454-1893
canadakathirkamam6@gmail.com
CKYMC Presenting Yoga Class
Begin your journey to a Better life with peace, Love, Beauty and Happiness
If you like to join Yoga, please contact CKYMC.
We arranged seperate class for kids, adults and Seniors.
Remodeling and renovations
General contract works
Moving Services
Painting
Flooring
Fencing
Book Now!
Arrow Construction
Our Home Maintenance services
437 880 9000
Lawn care
Trimming
Weed Control
Shrubs Arrangements
Inter lock and Stone Works
Garden Cleaning and Maintenance
Artificial and Live Sod Installation
ARROW
TEXTILE
Sarees Collection
2024
Kancheepuram, Benaras, Uppada, Ikkat, Paithani, Patolas, chanderi, Kota, Gadwal, Handlooms, Designer Fancy Sarees, Ghagras Salwars, Dress Materials, Western Wear
Tailoring Services
With a Needle a Sewing Machine with love
WE CAN MAKE YOUR DREAMSS COME TRUE
Saree blouses, Gowns, Woman Tops, Alterations, Hand Embroidery, Kids ( Customise Dresses)
(437) 880 9000
arrowmasterdevelopments@gmail.com
3001 Markham Rd, Unit 21 A, Scarborough, ON M1X 1L6.
web side

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# ஆடிப்பூர சிறப்பு பூசை

மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 6-08-2024 செவ்வாய்கிழமை காலை 8:30 தொடக்கம் பூசைக்கள் அரம்பமாகி 12:30 மணி வரை சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.

அத்துடன் 11-08-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 11:00 மணியளவில் கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று சிறப்பு ஆராதனை நடைபெற்று மகேஸ்வர பூசையுடன் முடிவடையும். அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

**80, Nashdene Rd, Unit #99**
**Scarborough, Ontario**
**(416) 436-9647**



# உலகெங்குமிருந்து தமிழ் பேசும் சாதனையாளர்கள் கனடாவில் சங்கமமாகும் மாபெரும் "சர்வதேச விருது விழா" - வெண்மேரி விருதுகள் - 2024

உலகெங்குமிருந்து தமிழ் பேசும் சாதனையாளர்கள் கனடாவில் சங்கமமாகும் மாபெரும் "சர்வதேச விருது விழா" – வென்மேரி விருதுகள் – 2024. மூன்றாவது ஆண்டு விருது விழா இது. முதலாவது விருது விழா யாழ்ப்பாணத்திலும், கடந்த ஆண்டு பிரான்ஸ் தேசத்திலும். தற்போது 3வது ஆண்டில் கனடாவிலும் நடத்தப்பெறுகின்றது.

ஒன்றாரியோ மாகாண முதல்வரும் தனது வாழ்த்துக்க்ளைத் தெரிவித்துள்ளார்.




**மேலதிக விபரங்களுக்கு: அனுரா (647) 854-2927**

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா — புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம் நடத்திய சிறப்புக்கள் பல நிறைந்த வருடாந்த ஒன்றுகூடல் — 2024



வர்த்தகப் பிரமுகர் உதயன் குணராஜா அவர்களைத் தலைவராகக் கொண்டியங்கும் கனடா - புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கம் நடத்திய சிறப்புக்கள் பல நிறைந்த வருடாந்த ஒன்றுகூடல் - 2024 கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மிலிக்கன் பார்க் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

காலை தொடக்கம் இருள் நெருங்கும் நேரம் வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுக்கள் என அனைத்து கண்களைக் கவரும் நிகழ்ச்சிகளுடன் மேற்படி ஒன்றுகூடல் தொடர்ந்து சென்றது.





அத்துடன் காலை. மதியம். மற்றும் பிற்பகல் நேரங்களுக்கான பல வகையான உணவு வகைகள் அங்கு அனைவருக்கும் பரிமாறப் பெற்றன. அத்துடன் சிறுவர் சிறுமியர்களுக்கு ஏற்ற உணவும் அங்கு தாராளமாக பரிமாறப்பட்டது.

கனடா - புங்குடுதீவு பழைய மாணவர்கள் சங்கத்தின் தற்போதைய நிர்வாக சபை உறுப்பினர்களும் அவர்களோடு இணைந்து முன்னைய காலப்பகுதிகளின் நிர்வாக சபை உறுப்பினர்களோடும் சேர்ந்து புங்குதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கனடா வாழ் குடும்பங்கள் அனைத்தும் இவ்வருடத்தின் ஒன்று கூடல் சிறப்பாக அமைய பக்கபலமாக இருந்தனர் என்றால் அது மிகையாகாது.

- சத்தியன்

# கனடாவில் "வென்மேரி" சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் விருதுகள் பெறும் வெற்றியாளர்கள் கனடா வந்தடைந்தனர்



எதிர்வரும் 11-08-2024 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை கனடாவில் நடைபெறவுள்ள "வென்மேரி" சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் விருதுகள் பெறும் வெற்றியாளர்கள் கனடா வந்தடைந்தனர்.

புதன்கிழமை மாலை ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தை வந்தடைந்தவர்களில் முக்கியமானவர் "வென்மேரி" சர்வதேச விருதுகள் தெரிவுக்குழுவின் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தடைந்தார்.





அத்துடன் பல சர்வதேச ஓட்டப்போட்டிகளில் பங்கு பற்றி பரிசுகள் பல பெற்ற ஓட்ட வீராங்கனை திருமதி. அகிலத்திருநாயகி ஸ்ரீசயனந்தபவன் முல்லைத்தீவிலிருந்து கனடா வந்தடைந்தார்.

அத்துடன் பிரபல பெண் திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன் அவர்களும் ஜேர்மனியிலிருந்து கனடா வந்தடைந்துள்ளார்.

விமான நிலையத்தில் இவர்களை வரவேற்கச் சென்றிருந்த குழுவில் "வென்மேரி" சர்வதேச விருதுகள் விழாவின் நிறுவனர், கனடா வாழ் அனுரா மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கடந்த வருடம் பிரான்ஸ் தேசத்தில் இடம்பெற்ற "வென்மேரி" விருதுகள் விழாவில் பத்திரிகைத்துறை சார்ந்த சாதனைக்கான விருது பெற்றவருமான லோகேந்திரலிங்கம் மற்றும் திருவாளர்கள் விசு கணபதிப்பிள்ளை, ஜஸ்டின் போல், திலிசன் ஆகியோர் உட்பட பலர் நிற்பதையும் காணலாம்.

- சத்தியன்


# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

யாழ்ப்பாணம் கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும்,
கனடா வோன், ரொறன்ரோ கனடாவில் வசித்து வந்தவருமான
திருமதி. மனோன்மணி கனகராஜா அவர்களின்
31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்.

தோற்றம்: 28-05-1955 மறைவு: 20-07-2024

*வானத்தின் நிலவாய், வையத்தின் தென்றலாய்!*
*கானத்தின் கீதமாய், எம்மோடு இணைந்தவளே!*
*நீயோ ஒரு புன்னகைத் தோட்டம்*
*சொல்வாயோ உன் புன்னகையால்*
*மலர்ந்து, விரிந்த தோட்டம்! தையலே நீ ஒரு இயந்திரம்*
*அதுவே உன் வெற்றியின் தந்திரம்!*
*அன்பையும், அறனையும், கடமையும்*
*பண்புடன் ஊட்டி பாசமாய் வளர்த்த தாரகையே!*
*நீ என்றும், எல்லோருக்கும் தெய்வம் தாயே!*
*உம் பிரிவை ஏற்க மறுக்கிறதே எம் உள்ளம்!*
*மனைவியாக, தாயாக, நண்பியாக வாழ்ந்தவளே!*
*நீ விட்டுச்சென்ற ஞாபகங்கள் என்றும் நிலைத்திருக்கும்*
*மாதம் ஒன்று கடந்தாலும் என்றும் எம்மோடு இருக்கின்றாய். . .*
*நித்திய சாந்தி நிலைத்திடவே என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*



அன்னாரின் பிரிவுத்துயர் அறிந்து எமது இல்லம் வந்தவர்கள், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், மலர்வளையங்கள் வைத்தவர்கள், தொலைபேசியில் அழைத்து தங்கள் துயரைப் பகிர்ந்து கொண்டவர்கள், உணவளித்தவர்கள் இன்னும் பல வழியில் உதவிபுரிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்ப சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி. மனோன்மணி கனகராஜா
(குஞ்சு)
(கரம்பன் கிழக்கு. ஊர்காவற்றுறை)

தங்கள் பிரிவால் வாடும்
கணவன் - கனகராஜா, மகள் - ரொசானி கனகராஜா
(647) 762-9026 (416) 545-9549

# பழனி

## (திருஆவினன்குடி * சித்தன் வாழ்வு * பொதினி * சிவகிரி)

**- கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன், இலண்டன்**

*கையாலுனைத்தொழச் சென்னியி னாலுன் கழல்வணங்க*
*மெய்யா யடிக்கடி வாக்காற் றுதிக்க விதித்துமனம்*
*நையா வியற்கையு நல்கினி யென்னை நழுவவிடேல்*
*ஐயா வுனக்கப யம்பழ னாபுரி யாண்டவனே*

**- பழனாபுரி மாலை**



தெய்வத்தமிழ் முருகன் படை வீடு கொண்ட திருப்பதிகளுள் திருவாவினன்குடி என்னும் இத்திருத்தலம் மூன்றாவது படைவீடாக அமைந்துள்ளது. பரங்குன்றத்தில் கல்மலையில் - கற்கோயிலமைத்துக் கல்லால் தெய்வமாகக் காட்சி தந்த செந்தமிழ் முருகன் இத்திருத்தலத்தில் சற்று வித்தியாசமாகக் காட்சி தருகிறான். இத்திருத்தலம் சங்க இலக்கியங்களில் பொதினி என வழங்கப் படுகிறது.

*முருகன் நற்போர் நெடு வேளாவி*
*அறுகோட்டியாங்கண் பொதினி யாளன்*

**- அகநானூறு**

பொதினி என்பது பொதிந்தது எனப் பொருள்படும். மேலும் இத்திருத்தலத்திற்கு "சித்தன் வாழ்வு" என்று ஒரு பெயர் உண்டு. சித்தன் வாழ்வு இல்லந்தோறும் மூன்றெரியுடைத்து என்று பாராட்டுகிறார் அருந்தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பெரும் புலவர் திருமுருகாற்றுப்படையில் ஐம்பது வரிக-ளில் "சீரை தைஇய உடுக்கையர், சீரோடு" எனத் துவங்கி "ஆவினன்குடி அசைதலும் உரியன்" என்று முடித்து இத்திருத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். அருணகிரியார் பழநியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் பாலசுப்பிரமணியனைப் போற்றி தொண்ணூற்று ஐந்து திருப்புகழ் பாடி மகிழ்ந்தவர். பழநிக்கு அடிவாரத்திலுள்ள தலம்தான் திருஆவினன்குடி. இது ஆவியர் குலத்து வள்ளலான பேகனுடைய ஊர். இம்மலைப் பகுதியை சேர குலத்துச் சார்வழியினர் ஆண்டு வந்ததாகத் தெரிகின்றது.

சிலம்பில் போற்றி வாழ்த்தப்பட்ட சேரன் செங்குட்டுவனின் மாற்றாந்தாயின் தந்தையான வேள்விக்கோமான் என்பான் பழநி மலைப் பகுதியை ஆட்சி புரிந்து வந்ததாக ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அவனது வழித்தோன்றலும் - சங்கம் போற்றி வாழ்த்திய கடையெழு வள்ளல்களில் ஒருவனுமாகிய பேகன் இக்குன்றினை அருளாட்சி செய்து வந்ததாகத் தெரிகிறது. பேகன் ஆவியர்குடியைச் சேர்ந்த வள்ளல் பெருமகன். அதனாலேயே இவனை "வையாவிக் கோப்பெரும் பேகன்" எனப் புலவர் பெருமக்கள் அழைத்து மகிழ்ந்தனர். ஆவியர் மரபினர் ஆண்டு வந்ததாலே ஆவினன்குடி என இத்தலம் அழைக்கப்படுகிறது. "சிவகிரி வரு பச்சிமத்து வாசல் சேரன் கோனா லயத்துள் நின்றிலங்கும் பரஞ்சுடரைச் சிந்தை செய்வோம்" என்ற பழநித் திருத்தலப் புராணம் கூறுவதையும், குன்றில் காணப்படுகின்ற கல்வெட்டுச் செய்திகளின் சான்றுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இத்தலம் சேரர் குல மரபினர் வழி வந்த சேர மன்னனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பிரிவுகளான வராக மலைக்கும், கொடைக்கானல் மலைக்கும் இடையே அமைந்துள்ள பள்ளத்தாக்கில் அமைந்து விளங்குகிறது இம்மலை. ஆவினன்குடி என்பது ஆவிக்கு நல்ல ஊராக இருப்பது என்று பொருள்படும். ஆவினான்குடி என்பது ஆவினன்குடி ஆயிற்று. இத்தலத்தினைப் பற்றிக் குறிப்பிடுகின்ற நக்கீரர் இக்குன்றில் முனிவர்களும் - யோகிகளும் பல நாள் உணவு உட்கொள்ளாது உண்ணா நோன்பிருந்து பெருந்தவம் செய்து பெருதற்கரிய பேற்றினைப் பெற்று, எல்லைலையில்லாப் பெருவாழ்வு வாழ்ந்ததாகவும், மாசில்லாத மகளிர்கள் யாழ் வாசித்துத் திருமுருகனை மகிழ்வித்ததாகவும், பிரமன் முதலிய பெருந்தேவர்களும் முப்பத்து முக்கோடி வானுல-கத் தேவர்களும் இங்கு வந்து, பால சுப்பிரமணியனிடத்துத் தம் குறைகளைத் தெரிவித்து விடுதி பெற ஒன்றாகக் கூடியிருந்த தலம் இத்தலம் என்பார் நக்கீரர்.

*"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்*
*ஆவினன்குடி அசைதலும் உரியன்*

என்ற திருமுருகாற்றுப்படை வரிகளுக்கு உரையெழுதிய பெரும் புலவர்கள் - இத்திருமுருகாற்றுப் படைப்பகுதி மலைமேல் மருந்தாக இன்று எழுந்தருளியிருக்கின்ற தண்டபாணிக் கடவுளைக் குறியாது: மாறாக அடிவாரத்தில் உள்ள திருஆவினன்குடியில் முருகன் தெய்வயானையம்மையோடு அருட்காட்சி கொடுக்கின்ற நிலையை வைத்தே அடி பாடப்பெற்றிருக்க வேண்டும் என்பது உரையாசிரியர் களது கருத்தாகவும் இருக்கிறது. அதுவும் தெய்வயானை அம்மையாராகிய ஓர் அம்மையுடனேயே அன்று எழுந்தருளியிருந்தார் என்ற உண்மையும் தெரிகிறது. ஆன்மிக அற்புதம் அன்றாடம் நிகழ்கின்ற திருத்தலம் பழநி. ஆம் இந்தத் திருக்கோயிலின் கர்ப்பக் கிரகத்தின் பின்புறம் இஸ்லாமிய சகோதரர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வணங்கி வருவது இன்றைக்கும் நடைபெறுகின்ற மத நல்லிணக்க ஒற்றுமைக்கு வலிவு தேடும் தெய்விகக் காட்சி.

ஆம், செவ்வேள் யாவருக்கும் இனியன் - எளியன் - வருந்துவோர் வாயில் வந்து வற்றாது வாரி வழங்கும் வள்ளல். பழத்தைப் பற்றிய புராணத்தோடு தொடர்புடையதால் பழனி - பழம்நீ - என்றும் பழமை என்றும் வயல்கள் சூழப் பெற்றதால் பழநியாயிற்று என்றும் உரைப்பர் பெரும்புலவர்கள். இதனைக் கூறவந்த உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியர் "இனிச் சித்தன் வாழ்வு என்ற சொல்லுகிற ஊர் முற்காலத்து ஆவினன் குடியென்று பெயர் பெற்றதென்றுமாம்" என ஒரு பாடலுக்கு உரையெழுதியுள்ளார் என்பதும் சிந்திக்கத்தக்கதாக உள்ளது. எனவேதான் இக்குன்றின் நாயகனுக்கு "சித்தன்" என்றோர் பெயரும் உண்டு எனத் தெரிகிறது. வேறோர் புதுமையும் வியப்பும் இத்தலத்தில் காணப்படுகின்றது. ஒரே திருத்தலத்தில் திருமுருகனுக்கு இரண்டு படை வீடுகள் - இரண்டு திருக்கோயில்கள் - அமைந்துள்ளமை வேறெந்த திருத் தலத்திலும் இல்லாத ஒரு சிறப்பு.

அடிவாரத்து ஆவினன்குடிக் கோயிலில் திருமுருகன் மயில் மீது எழுந்தருளித் திகழும் திருக்கோலத்தில் மூலவர் வேலாயுதசுவாமி என்னும் திருநாமத்தோடும் - குன்றின் உச்சியில் - ஞானக் கோவணாண்டியாகத் திகழும் மூலவர் தண்டாயுதபாணி என்னும் திருப்பெயர் பூண்டு அருட்கொடையை அடியவர்களுக்கு அன்றாடம் வாரி வழங்குகின்ற காட்சியைத் தந்து கொண்டிருக்கின்றார். பழனியப்பன் - பழநியாண்டி - பாலசுப்பிரமணியன் - வேலன் - முருகன் - சரவணன் - வேலாண்டி எனப் பல திருநாமங்களோடு அடியவர்களால் அன்போடு அழைக்கப்படுகின்ற கோவண ஆண்டி. முருகப் பெருமானுக்குரிய அகத்துறை நூல்தான் கந்தரந்தாதி. இதனைப் பாடியவர் அருணகிரியார். இதற்கு உரை கூறியதாக வில்லிபுத்தூராரைக் குறிப்பிடுவார்கள் இலக்கிய ஆய்வாளர்கள். அருணகிரிக்கும் வைணவத்தில் துறைபோகிய வில்லிபுத்தூராருக்கும் இடையே ஏற்பட்ட இலக்கிய சொல்லரங்கப் போட்டியால் வெளிவந்த நூல்தான் கந்தரந்தாதி என்றும் கூறுவர். பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் சிறந்த வைணவர். அரசு மரியாதையையும் - தலைமைப் பேற்றினையும் பெற்ற தலைமகன். பெரும் புலவர். சிறந்த கல்விமான். அன்றைய நாளில் திருமுருகன் நாமத்தை உச்சரித்து வாழ்த்தியும், பேசியும், பாடியும் வேறெதும் சிந்தனையில்லா அருணகிரியும் புகழ் உச்சியில் வாழ்ந்து வந்த பெருமகன்தான். அருட்கவி, வையகத்தின் வாழ்வியல் நெறியைப் பரப்பிய தவசீலர்.



*பழநிமலை வரலாறு*

"அதிசயம் அநேகம் உற்ற பழநி" என்பார் ஓசைமுனி என உலகம் போற்றும் தவஞானி அருணகிரி. பழைமையான ஞானத்திருப்பதி பழநியம்பதி. வாழ்வில் ஒரு நாளாவது காசிக்குச் சென்று கங்கை நீராடினால் முத்தி நிச்சயம். கர்மாவின் பாவங்கள் தொலைந்து போம் என அற நம்பிக்கையை நமக்கு நம்முடைய சமயம் சொல்லித் தந்திருக்கிறது. ஆனாலும் அந்தக் காசியைவிட மேலான, திருத்தலமாக, அரிய தலமாக போற்றப்படுவது பழனி தலமாகும். "காசியின் மீறிய பழனாபூரி மேவிய பெருமாளே" எனப் பாடி மகிழ்ந்தார் அருணகிரி. ரமணர் - அரவிந்தர் - இராமகிருஷ்ணர் போன்ற ஞானவள்ளல்கள் இருந்த நிலை ஞானநிலை. இந்த ஞானமே இறைவன். ஞான பண்டிதன். அந்த ஞானத்தை வழங்கவல்ல ஞானத்தந்தைதான் பழநியப்பன், அதனால்தான் பழநியை ஞானத்தலம் என்கின்றனர் சான்றோர். ஞானமே முத்திக்கு ஏதுவாகும் முதற்படி. சரியை. கிரியை, யோகங்கள் ஞானத்தை விளைவிக்கும் கருவிகள். ஆக ஞானத்தைத் தண்டாக ஊன்றி நிற்கும் ஞானமூர்த்திதான் தண்டாயுதபாணி. அடியார்கட்கு, தன்னை வழிபட்ட அன்பர்கட்கு ஞானத்தை அள்ளி அள்ளி வழங்கும் ஞானவள்ளலாக - மூல பண்டாரமாக - திருக்காட்சி கொடுக்கின்ற பேரருளாளன் பாலதண்டாயுதபாணி.



*"ஒருவாவி ஞான உயர்பொருளாய் மேவும்*
*திருவாவி னன்குடிவாழ் செய்ய - முருகன்*
*திருக்கழலைச் சிந்தித்தே தீமையெல்லாம் தேய்த்தே*
*இருக்கலாம் நல்லசுகத் தே"*

**- திருவாவினன் குடிவெண்பா**

**(தொடர்ச்சி 22 பக்கம்)**

*(21 பக்கத் தொடர்ச்சி)*

---

# பழனி

---

மெய்ஞ்ஞானத்தை அள்ளி வழங்குகின்ற தத்துவ நாயகனாக விளங்குகின்ற பழநியாண்டி, திருக்கோயில் கொண்டு எழுந்தருளித் திகழும் இத்திருத்தலத்தில் பழநிமலை - இடும்பன் மலை என இரண்டு மலைகள் அருகருகே அமைந்துள்ளன. அவ்விருமலைகளும் கடல்மட்டத்திற்கு மேல் 1068 அடிகள் 320 மீட்டர் உயரத்தில் உள்ளன. பழநி மலையின் உச்சியில் மணி முடிபோலே ஞான பண்டிதனின் திருக்கோயில் திருக்காட்சி தருகின்றது. இக்குன்றின் உயரம் 45 அடிகள். இதனை அடுத்து தான் இடும்பன் மலை அமைந்துள்ளது. இதனையடுத்து இடும்பன் குளம் உள்ளது. இவ்விரண்டு மலைகள் பற்றிய ஒரு வரலாறும் உண்டு. அருந்தவ முனிவர்களுள் தலைசிறந்த முனிவர் பெருமான், தமிழ் பாடி மகிழ்ந்த அகத்தியர். கந்தகிரியின் அருகில் "சிவகிரி" "சக்தி கிரி" என்ற இருமலைகளைச் சிவமாகவும் சக்தியாகவும் பாவித்து வாழ்த்தி வணங்கி வழிபட்டவர் அகத்தியர்.

ஒரு பொழுது தென்னாடுடைய சிவனிடம் "அப்பனே! சிவகிரி, சக்தி கிரிகளை என் இருப்பிடமாகத் தென்தமிழ் பொதிகைக்குக் கொண்டு செல்ல அனுமதி தந்தருள வேண்டும்" எனக் கேட்க, அப்பனும் அவ்வாறே "கொண்டு போ" என்றார். குறுமுனிவர் தமது தவவலிமையால் அந்த இருமலைகளையும் பெயர்த்துக் கொண்டு புறப்பட்டார். திருக்கேதார மலையைச் சார்ந்த "பூர்ச்சவனம்" என்ற இடத்தில் அம்மலைகளை வைத்து வழிபட்டார். பின்னர் திருவருளின் அருளாணை விதித்தபடி தாம் மட்டும் பொதிகைக்குச் சென்றார். சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற அசுர வேந்தர்களுக்கும் ஏனைய அசுரர்களுக்கும் வில் வித்தையைக் கற்பித்த அசுரகுல வில்லாசிரியன் இடும்பன். வேற்படையால் சூராதி அவுணர்கள் மாய்ந்த பின், இடும்பன் தம் மனைவியுடன் புறப்பட்டு ஒரு காட்டில் சிவலிங்கத்தை அமைத்து சிவபூஜை முறையாகச் செய்து வந்தான். அவன் உறைந்து வழிபட்ட திருத்தலம்தான் "இடும்ப வனம்" என்று இன்றும் வழங்கப்படுகிறது. திருக்கோயிலுக்குத் தென்கிழக்கில் பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இடும்பன் தன் மனைவியுடன் இடையிலுள்ள சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு பொதிகையை வந்தடைந்தான். பொதிகையிலே அகத்தியரைக் கண்டு மகிழ்ந்தான். அகதியர் செந்திலாண்டவனுக்கு உகந்தவர் என்பதை நன்கறிந்த இடும்பன் அவர் திருவடி தொழுது நின்றான். "எந்தையே! தமிழ் முனிவரே! செந்திலாண்டவனுக்கினிய சிவஞானச் செம்மலே! செவ்வேளை எவ்வேளையும் மறவாதவன் நான். அடியேனைத் தங்கள் சீடருள் ஒருவனாக ஏற்று அருள்புரிக!" எனத் திருவடி பற்றி வேண்டிக் கொண்டான் இடும்பன். அகத்திய முனி அகங் குளிர்ந்தார்.

"அப்பனே! உனக்குக் கந்தவேள் கருணை துணைபுரியும். நீயும் உன் மனைவியுடன் இங்கிருந்து தொண்டு புரிந்து - வெற்றிவேல் வேலவனை நினைத்து தவம் செய்து கொண்டு இரு. நமது அன்புக்கும் அருளுக்கும் என்றுமே உரியவன் நீ" என ஆசி கூறினார். இன்றைக்கும் பழநி மலையின் நடுப்பகுதியில் இடும்பன் கோயிலும் - அதற்கு அருகில் குராவடி வேலவர் கோயிலும் இருப்பதைக் காணமுடிகிறது. அன்று மலைமீது நின்ற முருகப் பெருமானே இன்றும் நின்று விளங்குகின்றார். பழநிமலையில் சுமார் இரண்டேகால் கிலோ மீட்டர் அளவிற்கு மலைப் பிரகாரம் உள்ளது. இப்பிரகாரத்தில் கடம்ப மரங்கள் நிறைந்த கண்கவர் மலர்ச்சோலைகளும் உள்ளன. பிரகாரத்தின் திருப்பங்களில் பெரிய பெரிய மயிற் சிலைகள் உள்ளன. தண்டபாணியைத் தரிசிக்க மலை உச்சி செல்ல மூன்று மலைப் பாதைகள் உள்ளன. படிக்கட்டுப் பாதை. யானையடிப் பாதை இழுக்கும் இரயில் பாதை.

படிக்கட்டுப் பாதையில் 4698 படிக்கட்டுக்கள் உள்ளன. அடிவாரத்தில் பாதவிநாயகர் சந்நிதியையும், மீனாட்சி சுந்தரேசுவரர் சந்நிதியையும் வழிபட்டுக் கடந்து, பழநிப்பதியை அன்றைய நாளில் ஆட்சி புரிந்த பாளையக்காரர்களின் உருவச் சிலைகளையும் பார்த்து ரசித்துக் கடந்து மேல் செல்ல வேண்டும். அடுத்து கண்ணப்பர் - தேவசேனாபதி திருமணக் கோலம் - சூர சங்கார சுப்பிரமணியர் - ஆகியோரது சிற்ப வடிவங்கள் நம்மைக் கவருகின்றன. இதை அடுத்து மயில் மண்டபம். இதனைத் தொடர்ந்து பல மண்டபங்கள் - இடை இடையே வள்ளியம்மை - விநாயகர் - இடும்பன் - முதலியோர் சந்நிதிகளை வழிபட்டுக் கொண்டே மலைமுடியை அடையலாம்.

யானையடிப்பாதையில் இத்தலத்தின் வரலாற்றை விளக்குகின்ற வகையில் சிற்பங்களும் - வள்ளி நாயகியைச் சோதிக்க வேலன் வேடனாக வந்த சிலைகளும், வள்ளியம்மன் சுனை என்ற வற்றாத சுனையும் உள்ளன. குன்றின் உச்சி மீது சிவமாக விளங்கும் பழனி மலையாண்டவனது திருக்கோயில், ஐந்து நிலைகளைக் கொண்ட ராஜ கோபுரத்தைக் கொண்டு விண்ணோக்கி உயர்ந்து காட்சி கொடுக்கின்றது. மலையடிப் பாதையிலிருந்து சென்றடையும் இரண்டாம் பிரகாரம் அங்கு துவங்குகிறது. இதிலிருந்து திருக்கோயிலுக்குள் செல்ல, மணிக்கட்டு மண்டபம் வழியாக வந்தால், அம்மண்டபத்தினுள் உள்ள சிற்ப வேலைப் பாடுகளைப் பார்த்துப் பரவசம் அடையலாம். அடுத்து வல்லப விநாயகரும் திருச்சந்நிதியும் கொடி மரமும் அக்னி குண்டமும் தங்கரத மண்டபமும் காட்சி கொடுத்து நம்மை மகிழ்விக்கும். அதனை அடுத்து நாயக்கர் மண்டபம். இதில் சுப்பிரமணியர், விநாயகர், நக்கீரர், அருணகிரி போன்ற திருச்சந்நிதிகள் காணப் படுகின்றன.

இவர்களை வழிபட்டு ராஜகோபுர வாயில் வந்தவுடன் சிற்பக் கலையின் உச்சத்தைக் காட்டவல்ல அழகிய பாரவேல் மண்டபத்தையும், நவரங்க மண்டபத்தையும் காணலாம். அதிலிருந்து முதல் பிரகாரத்திற்குள் நுழைந்தால் ஞானதண்டாயுதபாணியின் திருக்கோயிலை வலம் வரலாம். இப்பிரகாரத்தின் வடபாகத்தில் மலைக் கொழுந்தீசுவரர், அம்பிகை, நவவீரர்கள், முதலியோர் திருச்சந்நிதிகள் கண்டு மகிழ்ந்து தென்பாகத்தில் உள்ள சப்த கன்னியர், கைலாசநாதர், சண்டிகேசுவரர் ஆகியோரை வலம் வந்து தரிசித்து வந்தால் பதினெண் சித்தர்களில் ஒருவரான போகரின் திருச்சந்நிதியைக் கண்டு வணங்கி மகிழலாம். இச்சந்நிதியில் போக சித்தரால் பூசிக்கப்பட்ட புவனேசுவரியம்மன் மரகதலிங்கம் ஆகிய திருவுருவச் சிலைகள் காணப்படுகின்றன. இங்கு ஒரு சுரங்கப்பாதை உள்ளது. இப்பாதை கருவறையில் அருட்காட்சி தந்து கொண்டிருக்கின்ற தண்டபாணித் தெய்வத்தின் திருவடிவரை செல்கின்றது என்றும் - போகர் இறுதியாக இச்சுரங்கத்தினுள் சென்று திருமுருகன் திருவடி நிழலில் உய்யப் பெற்றார் என்பர் வரலாற்று ஆசிரியர்கள். நவரங்க மண்டபப் பாதையின் தொடக்கத்தில் உலோகத்தாலான சேவற்கொடி காணப்படுகின்றது. இக்கொடியின்மீது அன்றாடம் ஓர் உயிருள்ள சேவல் அடிக்கடி வந்து உட்கார்ந்து அன்பர்களுக்கு அருட்காட்சி கொடுப்பது இத்திருத்தலத்தின் அற்புதங்களில் ஒன்று. இதனை அடுத்து தட்சிணாமூர்த்தித் தூண். அதனருகில் உள்ள மண்டபத்தில் நடராசர், நவவீரர், வேலாயுத விசுவநாதர் முதலிய உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர்.

இம்மண்டபத்தில் சண்முகப் பெருமானுக்கும், ஞான தண்டாயுதபாணியின் உற்சவ மூர்த்தியான சின்னக் குமரய்யாவிற்கும் தனித்தனியாகத் திருச்சந்நிதிகள் அமைந்துள்ளன. இதனை அடுத்து அர்த்த மண்டபமும் - கருவறையும் காணப்படுகின்றன. கர்ப்ப கிரகத்தின் சுவர்களில் பல அரிய கல்வெட்டுகள் உள்ளன. பக்கத்தில் முருகப் பெருமான் குதிரைமீது செல்லும் மன்னனாக வந்து இடும்பனுக்கு வழிகாட்டிய சிற்பம் காணப்படுகின்றது. இதன் பின் சுவரில்தான் இஸ்லாமியச் சகோதரர்கள் தீபம் காட்டி வழிபடுகின்றனர். கர்ப்ப கிருகத்தின் மேற்கூரை பொன்னால் வேயப்பட்டது. உள்ளே பற்றற்ற கந்தவேள் ஞான தண்டாயுத பாணியாக பாலகோவணாண்டியாக நின்ற திருக்கோலத்தில் திருக்காட்சி தந்து திருவருள் புரிகின்ற அற்புதத்தைத் தரிசிக்க முடிகிறது. ஞானபண்டிதன் மேற்கு நோக்கிய நிலையில் - நின்ற கௌபீன தாரியாக அருள் சுரக்கும் திருப்பார்வைப் பொலிவும் கூடிய புன்னகையும், துலங்கும் திருமார்பும், அரையில் வைத்த இடக்கரத்தின் பேரழகும், ஞான தண்ட மேந்திய வலக்கரத்தின் எழலும், திருப்பாதங்களில் சிறு தண்டைகளணிந்து நிற்கின்ற ஞான பண்டாரம், வேலனாக, அரசனாக, ஆண்டியாக்க, விருத்தனாக விதவிதமாய் நிமிடந்தோறும் அலங்கரித்த தோற்றப் பொலிவோடு காட்சி கொடுத்துக் கொண்டேயிருக்கின்றான்.

சரவணப் பொய்கையும் - சண்முக நதியும் இத்தலத்தின் புண்ணிய தீர்த்தங்கள். சரவணப் பொய்கையில் நீராடியே ஞானப் பழத்தின் நாயகனைத் தரிசக்கச் செல்லுதல் வேண்டும் என்பது மரபு வழி வழிபட்ட நிகழ்வு. இது ஒரு காலத்தில் நெல்லி வனமாக இருந்தது. இன்றும் நெல்லியே தலவிருட்சமாக உள்ளது. சித்திரைத் திங்கள் திருவிழா வைகாசி விசாகம் தைப்பூசம், கந்தசஷ்டித் திருவிழா, திருக்கார்த்திகைப் பெருவிழா, பங்குனி உத்திரத் திருவிழா எனப் பல விழாக்கள் இத்தலத்து நாயகனுக்குண்டு. யோகியார், ஞானியார், சித்தர்கள், கவிஞர்கள், இசைப் பாடலாசிரியர்கள் என வகைவகையானோர் வாய் மணைக்கப் பாடி மகிழ்ந்த திருத்தலம் பழநி. திருமுருகன் பழநி மலையில் குடியேறிய செய்தி நாம் அறிந்ததே. சிவபெருமானுக்கு நாரதர் ஒரு மாம்பழத்தைத் தந்து ஓர் ஓரங்க நாடகத்தை நடத்திய புராணக் கதை நமக்குத் தெரிந்ததுதான். ஞானமார்க்கத்துக்கு வழிகாட்டும் ஞானப் புன்னகையுடன் ஞானமே வடிவாக நிற்கின்ற பெருமானது வரலாறு சுவையானது.

## வீணாவின் கவிக்கணை

நீ
நீயாக இரு தவறல்ல,
ஆனால்
அடுத்தவரும் உன்னை
போல் தான் இருக்க
வேண்டும் என எண்ணாதே,
அது சாத்தியமும் அல்ல,
ஒவ்வொரு மனமும்
ஒவ்வொரு விதம்,
அதில் தோன்றும்
எண்ணங்களும் சரி
வண்ணங்களும் சரி
வேறு வேறு தான்,
எல்லோரும் ஒரே மாதிரி
சிந்திக்க துவங்கி விட்டால்
நம் வாழ்க்கை சுவாரஸ்யம்
இல்லாமலே போய்விடக்கூடும்.



# அன்பின் தொனி - 784

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**மூடன் வழியிலே நடக்கிறபோதும் மதிகெட்டவனாயிருக்கிறான்**

செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும். ஞானியின் இருதயம் வலதுகையிலும், மூடனின் இருதயமோ இடதுகையிலும் இருக்கும். மூடன் வழியிலே நடக்கிறபோதும் மதிகெட்டவனாயிருக்கிறான்; தான் மூடனென்று அவன் எல்லாருக்கும் சொல்லுகிறான். அதிபதியின் கோபம் உன்மேல் எழும்பினால் உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே; இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும். நான் சூரியனுக்குக்கீழே கண்ட ஒரு தீங்குண்டு, அது அதிபதியினிடத்தில் தோன்றும் தப்பிதமே. மூடர் மகா உயர்ந்த நிலையில் வைக்கப்படுகிறார்கள்; சீமான்களோ தாழ்ந்தநிலையில் உட்கார்ந்திருக்கிறார்கள். வேலைக்காரர் குதிரைகள்மேல் ஏறிப்போகிறதையும், பிரபுக்கள் வேலைக்காரர்போல் தரையிலே நடக்கிறதையும் கண்டேன். படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்; அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும். கல்லுகளைப் பேர்க்கிறவன் அவைகளால் காயப்படுவான்; மரத்தைப் பிளக்கிறவன் அதினால் மோசப்படுவான். இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிகபலத்தைப் பிரயோகம் பண்ணவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம். தடைகட்டப்படாத பாம்பு கடிக்குமே, அலப்புவாயனும் அதற்கு ஒப் பானவன். ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்; மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும். அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமுமாம். மூடன் மிகுதியாய்ப் பேசுகிறான், நடக்கப்போகிறது இன்ன தென்று மனுஷன் அறியான்; தனக்குப் பிற்பாடு சம்பவிக்கப்போகிறதை அவனுக்கு அறிவிப் பவன் யார்? ஊருக்குப் போகும் வழியை மூடன் அறியாததினால், அவன் தொல்லை ஒவ்வொருவரையும் இளைக்கப்பண்ணும். ராஜா சிறுபிள்ளையுமாய், பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, உனக்கு ஐயோ! ராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது. மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப் பழுதாகும்; கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும். விருந்து சந்தோஷத்துக்கென்று செய்யப்படும்; திராட்சரசம் ஜீவனு ள்ளோரைக் களிப்பாக்கும்; பணமோ எல்லாவற்றிற்கும் உதவும். ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே, ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே; ஆகாயத்துப்பறவை அந்தச் சத்தத்தைக் கொண்டு, செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும்.
**- பீரசங்கீ 10: 1-20**

உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய். ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு; பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது. மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின்மேல் பொழியும்; மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும். காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிற வன் அறுக்கமாட்டான். ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும் புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய். காலையிலே உன் விதையை விதை; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே. **- பீரசங்கீ 11: 1-6**

**தொடரும்...**

*(11 பக்கத் தொடர்ச்சி)*

## *மீண்டும் ஆளத் துடிக்கும் "ராஜபக்சக்கள் குடும்பம்"*

**கே. பாலா**

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக பிரபல வர்த்தகரும் எம்.பி.யுமான தம்மிக்க பெரேரா அறிவிக்கப்படவிருந்தமையே பொதுஜன பெரமுனவிலிருந்து 92 எம்.பி.க்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவும் பங்காளிக்கட்சிகள் வெளியேறவும் காரணம் என்பதனை இறுதியில் தெரிந்து கொண்ட நிலையிலேயே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்சவை அறிவித்து ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவருக்கு ஆதரவளித்த 92 பொதுஜன பெரமுன எம்.பி.க்களுக்கும் "செக்" வைத்துள்ளது மஹிந்த ராஜபக்ச தரப்பு. ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச என்ற அறிவிப்பினால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் பொதுஜன பெரமுனவின் 92 எம்.பி.க்களில் பலர் தமது நிலைப்பட்டை மாற்றுவார்கள் என ராஜபக்சவினர் எதிர்பார்க்கின்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவது பொதுஜன பெரமுனவினதோ அல்லது அதன் வேட்பாளர் நாமல் ராஜபக்சவினதோ இலக்கு அல்ல. தமது கட்சியை பாதுகாத்து எம்.பி.க்களை தக்கவைக்கும் அதேவேளை பொதுஜன பெரமுனவை உடைத்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி கொடுப்பதேயாகும். அத்துடன் எதிர்கால ஜனாதிபதியாக வடிவமைக்கப்படும் நாமல் ராஜபக்சவை வெள்ளோட்டம் விட்டுப்பார்க்கும் முயற்சியாகவும் மஹிந்த தரப்பு இந்த தேர்தலை பயன்படுத்த நினைப்பதுடன் இளைஞர்களின் வாக்குகளே ராஜபக்சக்களின் இலக்காகவும் உள்ளது.

அத்துடன் இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் கட்சி ஆதரவாளர்களுக்கு புத்துணர்வூட்டுவதுடன் அடுத்த பாராளுமன்றத்தேர்தலில் எதிர்கட்சியாகி மக்கள் மனங்களை மீண்டும் வென்று அதன்மூலம் மீண்டும் ஆட்சிபீடம் ஏறவேண்டும் என்பதே ராஜபக்சக்களின் திட்டம். அதற்காக ராஜபக்சக்கள் எந்த எல்லை வரைக்கும் செல்வார்கள் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

# Common Tamil Candidate for President Amidst Lack of Consensus



Former Tamil National Alliance MP and Batticaloa-based Tamil politician Packiaselvam Ariyanethran has been declared the common presidential candidate by Tamil National Parties.

This was announced at a joint meeting of Tamil National Parties, Civil Society Organization members, academics, and others in Jaffna by Nallathamby Srikantha a former Tamil MP and senior attorney and leader of the Tamil National Party.

While a common Tamil candidate for the September 21st Presidential election has been declared, no consensus has emerged among the Tamil parties.

Even among the Ilankai Tamil Arasu Katchi (ITAK) to which Packiaselvam Ariyanetharan belongs there is no common ground. While ITAK President-elect and Jaffna district MP Sivagnanam Siritharan says he personally supports a common candidate, his party colleague and attorney M.A. Sumanthiran has openly declared he is against any common Tamil candidate.

"Supporting a common Tamil candidate is my personal opinion because we have been let down continuously for voting for the Sinhala candidates and don't want to repeat it. However, the final decision of the party will be made after the General Council meeting scheduled on the 11th of August" says Siritharan.

But Sumanthairan is more vocal in his stand and has made it categorically clear he is not in favour of any such proposal

"The common Tamil candidate idea is a very bad one because it will make the Tamil cause weak, Sumanthiran said. "This is not an election one can use to send a message on Tamil issues. This is not a referendum on the right of self-determination" he posted on his X account quoting his interview with a Colombo-based English Newspaper.

The declaration of a common Tamil candidate is continuing as a contentious issue among the Tamil parties. While the Tamil National People's Front led by Jaffna district parliamentarian Gajendrakumar Ponnambalam has called for the boycott of the ensuing presidential poll, the pro-government Eelam People's Democratic Party led by fisheries minister Douglas Devananda supports a Sinhala candidate mostly the current President Ranil Wickremesinghe.

An agreement to put forward a common Tamil candidate was reached between various Tamil parties and Civil Society organizations and signed accordingly. Apart from the social organizations support for the common candidate came from former Chief Minister of the Northern Province and leader of the Tamil People National Alliance, Tamil Eelam Liberation Organization (TELO) led by Vanni district MP Selvam Adaikkalanathan, Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) led by former Jaffna MP Suresh Premachandran, People's Liberation Organization for Tamil Eelam (PLOTE) with Dharmalingam Sitharthan as its leader, former Northern Province Minister Ponnuthurai Ayngaranesan led Tamil National Green Movement and Crusaders Democratic Party comprising former LTTE cadres.

Despite being signatories to the under-standing and agreement C.V.Wigneswaran, Selvam Adaikkalanathan and Dharmalingam Sitharthan did not attend the meeting in Jaffna where the name of the common candidate was revealed.

Even in TELO, the support for the common candidate is divided. While its leader supported the move, the party's other MP from Vanni Vino Noharathalingam has publicly opposed this stand saying "The idea of a common candidate doesn't make sense without the ITAK and TNPF coming on board".

The party's other MP from Batticaloa Govindam Karunakaran has not commented on the common candidate even though Packiaselvan Ariyanethran is from the same district. ITAK MP from Batticaloa Shanakkiyan Rasamanickam has generally thrown his weight behind Sumanthiran on party and public issues.

In the 2010 presidential election M K Sivajilingam, a former MP from Jaffna district had contested as an independent and secured less than 10,000 votes, in which Mahinda Rajapaksa riding on the euphoria of a war victory convincingly won over his friend turned-foe former Army chief Sarath Fonseka by nearly two million votes.

The only Tamil who got a significant number of votes in a Presidential election was Kumar Ponnambalam father of Gajendrakumar Ponnambalam when he contested the 1982 polls against the sitting President J R Jayawardane and secured 173,934 votes. That election was the first after the introduction of the Executive Presidency system introduced by J R Jayawardane.

Although pragmatically a Tamil or Muslim candidate winning the Presidential election doesn't exist which political analysts say is deeply skewed in favour of Sinhala candidates.

However, War-affected Tamils who are in favour of a common Tamil candidate say, it is an opportunity to express their political will knowing well the outcome of the result.

However, a lack of consensus in supporting a common Tamil candidate has exposed the deep divide among the Tamil polity.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளை புள்ளிவிபரங்களோடு பாராளுமன்றில் எடுத்துரைத்த எம்.பி சண்முகம் குகதாசன்

- நடராசா லோகதயாளன்

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் 06-08-2024 அன்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக உரையாற்றியிருந்தார். குறிப்பாக திருக்கோணேஸ்வர ஆலய விவகாரம், விவசாயிகளின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமை, மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் உட்பட பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக உரையாற்றியிருந்தார்.

அவர் பாராளுமன்றில் உரையாற்றுகையில், திருக்கோணேச்சரம் வரலாற்று புகழ்மிக்க ஒரு புனிதத் தலம் இக்கோவிலுக்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர் இவர்கள் இந்த இடத்தின் அழகைக் கண்டு களிக்க விரும்புகின்றனர். சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட கடைகள் இதற்குத் தடையாக உள்ளன. மேலும் இக்கடைகளினால் கோவிலின் புனிதத் தன்மை கெடுவதோடு இங்கு சில சமூக விரோதச் செயல்பாடுகளும் இடம் பெறுகின்றன. எனவே இக்கடைகளை வேறு ஒரு தகுந்த இடத்திற்கு மாற்ற வேண்டும் என 2019 மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது எனினும் இம்முடிவு இது வரையிலும் செயற்படுத்தப்பட வில்லை இந்த முடிவை விரைந்து செயற்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக நமது நாட்டின் குடியரசுத் தலைவரும் அரசும் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். எனினும் அரசின் ஓர் அங்கமான வனத் துறை திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ நாற்பதாயிரம் ஏக்கர் நிலைத்தையும் தொல்பொருள்துறை 2600 ஏக்கர் நிலைத்தையும் கையகப் படுத்தி வைத்துள்ளனர்.

இந்தக் காணிகள் 1985ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் ஆகும். 1985ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கூறிய பொழுதும் அது நடைபெறவில்லை. இந்தக் காணிகளை விடுவிக்க அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ள பகுதிக்குள் 80 சிறு குளங்கள் உள்ளன. வனத்துறை இந்த நிலங்களை விடுவித்து இக்குளங்களை திருத்தி அமைப்பதன் மூலம் சில ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை நெற்செய்கையின் கீழ் கொண்டுவர முடியும். இவற்றின் மூலம் நாட்டின் நெல் உற்பத்தியை பெருக்குவதோடு உழவரது பொருண்மிய நிலையையும் மேம்படுத்தலாம்.

மூன்றாவதாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கடற் தொழிலாளர் எதிர்கொள்ளும் சிக்கல்களை பற்றி தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 23,000 ஆயிரம் குடும்பங்கள் கடற் தொழிலை நம்பி வாழ்கின்றனர் எனினும் நவீன மீன்பிடி முறைமைகள் எதுவும் பின்பற்ற படுவதில்லை. பன்னாள் மீன்பிடிப் படகு வைத்திருக்கும் மீனவர்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். பெரும்பாலும் ஓர் எந்திரம் பூட்டிய படகில் சென்று மீன் பிடிப்பவர்களே மிகப் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களால் அதிக மீன்களையும் பிடிக்க இயலவில்லை கடலுக்குச் செல்லும் பொழுது அடிக்கடி காணாமலும் போகின்றனர். அப்படி துன்பப் பட்டு போராடிப் பிடித்த மீன்களுக்கு சரியான விலையும் கிடைப்பதில்லை பெரும்பாலும் இடைத் தரகர்களே இலாபம் ஈட்டுகின்றனர்.

இதற்கான தீர்வாக ஏழை மீனவர்களுக்கு பன்னாள் மீன்பிடிப் படகு கொள்வனவு செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன் கொடுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மேலும் பன்னாள் மீன்பிடிப் படகுத் துறைகள் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இலங்கைத் துறை முகத்துவாரம், சம்பூர் மற்றும் சல்லி ஆகிய மீன்பிடி கிராமங்களில் நிறுவப்பட வேண்டும். இதனால் மீன் பிடியையும் மீனவர் பொருண்மியத்தையும் கூட்ட இயலும் என்பதோடு கடலில் காணாமற் போவோரின் எண்ணிக்கையும் குறையும். அதுமட்டுமின்றி படகுககள் காணாமற் போகுமிடத்து அப்படகுகளை வானூர்திகள் மூலம் தேடும் நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டும்.

திருக்கோணமலை மாவட்டக் கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு சிக்கல் சுருக்குவலையில் மீன் பிடிப்பதாகும். இதன் காரணமாக கடல் வளம் வரம்பை மீறிச் சுரன்டப் படுவதோடு 100 ஏழை மீனவர் பிடிக்கும் மீன்களை ஒரே ஒரு பெரும் முதலாளியின் சுருக்குவலை படகு பிடிக்கின்றது. சுருக்குவலை சிக்கலுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டுமாயின் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு அவற்றை முழுவதுமாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

நான்காவதாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவும் கல்வி தொடர்பான சிக்கல்களை தங்கள் மேலான பார்வைக்கு கொண்டு வருகின்றேன் இம் மாவட்டத்தில் 166 தொடக்க கல்வி ஆசிரியர் பற்றாக்குறையும் 116 கணித ஆசிரியர் பற்றாக்குறையும் 53 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் 60 அறிவியல் ஆசிரியர் பற்றாக்குறையும் 52 கணினி ஆசிரியர் பற்றாக்குறையும் 53 தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையும் ஆக மொத்தம் 500 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களது கல்வி மிகவும் பாதிக்கப் படுகிறது எனவே ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு போதிய ஆசிரியரை மாவட்டதிற்கு ஒதுக்கி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப் பங்கீடு சரியான முறையில் அமையவில்லை மாகாணங்களுக்கு ஆசிரியர் நியமிக்கும் பொழுது பெரும்பாலான ஆசிரியர் திருக்கோணமலை மாவட்டத்திற்கு வருகின்றார்கள். வந்த சில காலங்களில் தத்தம் மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுகொண்டு சென்று விடுகின்றனர்.

இந்தச் சிக்கலைத் தீர்பதற்குக் கல்வியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கும் பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்தால் இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். உள்நாட்டு அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு. அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின்றார்கள் இதே முறையை கல்வி அமைச்சும் பின் பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைச் சிக்கலுக்கு தீர்வு காணலாம்.

மேலும் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. கல்வித் துறைக்கு 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.3 வீதம் நிதி மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.5 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் குறைந்தது 5வீதம் ஆவது உயர்த்தப்பட வேண்டும்.



மேற்கு நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தில் 5 வீதம்க்கும் கூடுதலான தொகையை கல்விக்கு ஒதுக்குகின்றன என்பதையும் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் மாவட்ட மருத்துவமனையில் 54 மருத்துவர் பற்றாக்குறையும் 9 துறைசார் மருத்துவ நிபுணர் 7 செவிலியர் பற்றாக்குறையும் 3 மருந்தாளர் பற்றாக்குறையும் 39 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் 3 சாரதிகள் பற்றாக்குறையும்.

மேலும் மாகாண அரசின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் 40 துறைசார் மருத்துவ நிபுணர் பற்றாக்குறையும் 21 மருத்துவர் பற்றாக்குறையும் 27 செவிலியர் பற்றாக்குறையும் 22 மருந்தாளர் பற்றாக்குறையும் 6 மிகைஒலி ஊடுகதிர் தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையும் 100 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்யுமாறு உரிய அமைச்சரைக் கேட்டுக் கொள்கின்றேன்.

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் ஒரு பகுதி கட்டப்பட்ட நிலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளன. இப்பிரிவில் அதிகளவில் நோயாளிகள் அனுமதிக்கப்படுவதால், நோயாளிகளை நிர்வகிக்க போதிய இடவசதி இல்லாத நிலை உள்ளது. இக்கட்டடத்தை கட்டி முடிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச்சைக்கான பிரிவு ஒன்று இல்லை இதனால் இம் மாவட்ட மக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவர்கள் வெளி மாவட்டங்களுக்கு சிகிச்சைக்காகச் செல்கின்றனர். இதன் விளைவாக இம்மக்கள் பணச் செலவு, போக்குவத்து, நேரம், மொழி, தங்குமிட வசதி முதலிய சிக்கல்கள்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றை தீர்ப்பதற்கு புற்றுநோய் பிரிவு ஒன்றை இம்மாவட்ட மருத்துவமனையில் நிறுவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் விளையாட்டு அரங்கு இல்லாமல் இருப்பதே ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள முதன்மையான மிகச் சிறந்த பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய ஆஉ.ர்நணைநச விளையாட்டு அரங்கு நீண்ட காலமாக மறுசீரமைக்கப் படாமல் புதர் மண்டிபோய் உள்ளது. இதை மறுசீரமைப்பதன் மூலம் திருக்கோணமலையில் விளையாட்டு துறையில் சாதிக்க எண்ணும் பல நூற்றுக்கணக்கான இளையோர்கள் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதோடு பன்னாட்டு விளையாட்டு போட்டிகளை இங்கே நடத்தமுடியும் இதன் வழியாக நாட்டிற்கு அந்நிய நாணய மாற்று வருவாயை கொண்டு வர முடியும்.

அடுத்ததாகத் துறைமுக அதிகார சபையானது, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பதினொரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 5572 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்தியுள்ளது. இதில் 1868 ஏக்கர் நிலத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் வாழ்கின்றார்கள்.துறைமுக அதிகார சபையின் கையகப் படுத்தல் காரணமாக மக்கள் தங்கள் நிலத்தில் எந்தவித செயற்பாடுகளையும் செய்ய இயலாமல் உள்ளது ஆகவே இவ்விடங்களை அங்கு வாழும் மக்ககளுக்கு கையளிக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 10,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன இவர்கள் போதிய படிப்பறிவு, பட்டறிவு மற்றும் வினைத்திறன் அற்றவர்களாக காணப்படுகின்றனர் ஆகவே இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை கொடுத்து கமத்தொழில், கைத் தொழில், கால்நடை வளர்ப்பு, சேவைத் துறை முதலியவற்றில் சுயதொழில் செய்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகள் தெளிவாக இல்லை இதனால் அதிகாரிகளும் பொது மக்களும் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். இந்த எல்லைகளை தெளிவு படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரையில் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், மீனவர்கள், நோயாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை இந்த உயரிய அவையில் கவனத்திற்கு கொண்டு வந்து உள்ளேன் இவற்றைத் தீர்ப்பதற்கு உரிய அமைச்சர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன் என உரையாற்றியிருந்தார்.


# கட்டுடை மருதமன்றம் கனடா

நடாத்தும்

## கோடைகால ஒன்றுகூடல் 2024

திகதி : Saturday, August 17, 2024

இடம் : Neilson Park - Scarborough
( 1555 Neilson Rd, Toronto, ON M1B 5Z7,
Main Intersection : Neilson Road & Finch Avenue East)

நேரம் : 10.00 am - 4.00 pm

எமது ஊரின் உறவுகளை அன்புடன் அழைக்கிறோம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# காங்கேசன்துறை – நாகப்பட்டினம் கப்பல் சேவை மீண்டும், ஆகஸ்ட் 15இல் ஆரம்பம்

- நடராசா லோகதயாளன்

காங்கேசன்துறைக்கும நாகபட்டினத்திற்குமான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையே மீண்டும் இம் மாதம் 15 ஆம் திகதி தொடங்கப்படவுள்ளது.

காங்கேசன்துறை நாகப்பட்டினம் கப்பல் போக்குவரத்து கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 13-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டு அதே மாதம் 23-ம் திகதியுடன் நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட கப்பல் சேவை இந்த ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதியில் இருந்து பயணிகள் கப்பல் இடம்பெறும் என அறிவிப்பு வெளியிட்டப்பட்டபோதும் அது தடைப்பட்டது.

இந்த நிலையிலேயே இக் கப்பல் சேவை எதிர் வரும் 15 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கான கப்பல் 06-08-2024 தினம் நாகபட்டினம் துறைமுகத்தை வந்தடைந்து, கப்பலின் வெள்ளோட்டம் 2024-08-08 அன்று இடம்பெறவுள்ளது.

இதேநேரம் தற்போது யாழ்ப்பாணம் சென்னை இடையே தினமும் ஒரு தடவை இடம்பெறும் விமான சேவை செப்ரெம்பர் முதலாம் திகதியில் இருந்து இரு விமான சேவையாக இடம்பெறவுள்ளது. மாலையில் இடம்பெறவுள்ள விமான சேவையை இன்டிகோ நிறுவனம் வழங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசிய கட்சிகள், சிவில் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முடிவு



(08-08-2024)

தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்று நாங்கள் அனைவரும் முடிவெடுத்து இருக்கின்றோம் என முன்னாள் வட மாகாண அமைச்சராக இருந்த அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 2024 ஆம் ஆண்டு நடை பெறும் ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கையில் இருந்து பல கட்சிகளைச் சார்ந்த சிங்கள வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தினை செலுத்தி உள்ளனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது பற்றி கடந்த ஆறு மாதங்களாக பேசப்பட்டு வருகின்றது.

அது தொடர்பில் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட தரப்புகளுடன், பல்வேறுபட்ட தனி நபர்களுடன் நாங்கள் பேசியிருக்கின்றோம். அந்த வகையில் நமது வேட்பாளர் தொடர்பாக நாங்கள் கலந்துரையாடி இரண்டு மூன்று பெயர்களை நாங்கள் கூறியிருக்கின்றோம்.

அதில் ஒருவரை கட்டாயமாக பொது வேட்பாளராக நிறுத்துவோம். பொது வேட்பாளர் யார் என மக்களுக்கு தெரியப்படுத்துவோம்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து திரு. அரியநேந்தனும் வடக்கு மாகாணத்தை மையமாக வைத்து தவராசாவும் என இரண்டு பேர் இன்று இருக்கின்றார்கள். எல்லோருக்கும் இணங்க சரியான ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

தமிழரசு கட்சியால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம்.

ஆனால், தமிழரசு கட்சியில் இருக்கக் கூடிய மிகப் பெரிய பெரும்பான்மையான உறுப்பினர்கள் இவர்களது நியமனங்களை ஏற்றுக்கொள்வதாக தான் நான் அறிகின்றேன்.

ஆகவே, அந்தவகையில் அவர்களைப் பொறுத்தவரையில் தமிழரசு கட்சி அதற்கு எதிராக முடிவுகளை எடுக்காது என எதிர்பார்க்கிறார்கள்.

எனவே, அந்த வகையில் எடுத்தால் கூட எதிர்கொள்ள கூடிய வகையில் தான் அவர்கள் இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.



# வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் 09-08-2024 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்று 08 ஆம் திகதி இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயப் பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அந்தவகையில் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள கொடிச்சீலை உபகாரரின் வீட்டில் இருந்து கொடிச்சீலை யாழ் சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல்மடம் முருகன் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய இரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்தது.

அதனை தொடர்ந்து ஆலய வெளிவீதி வலம்வந்து சுபநேரத்தில் கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

09 ஆம் திகதி காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளது.

செப்டெம்பர் 01ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 02 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.



# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை களமிறக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து தமிழ்த் தேசிய கட்சியின் தலைவரும் பொது வேட்பாளர் தெரிவுக்கான குழுவின் உறுப்பினருமான ஸ்ரீகாந்தா இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

7 தமிழ் கட்சிகளும் 7 சிவில் அமைப்புகளும் இணைந்து உருவாக்கியுள்ள தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் சார்பில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புக்கான உடன்படிக்கை, அண்மையில் கைச்சாத்திடப்பட்டதுடன் தமிழ்ப் பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காகக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

இந்த குழு பல்வேறு கட்ட கலந்துரையாடல்கள் மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டு தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளது.

# யாழ்ப்பாண மாநகர சபையின் பருத்தித்துறை பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஆபத்தை ஏற்படுத்தும் பாதை தடை தொடர்பான கலந்துரையாடல்!

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாண மாநகர சபையினால் பொதுமக்களுக்கு உபிராபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பாதை தடை தொடர்பில் பல தரப்பினராலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட முறைப்பாடு தொடர்பில் இவ் ஆணைக்குழுவினால் கவனம் செலுத்துப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு 09.08.2024 (வெள்ளிக்கிழமை) மு.ப. 11.30 மணிக்கு இல 42, கோவில் வீதியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

த. கனகராஜ்
பிராந்திய இணைப்பாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம்


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி aches | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

கனடிய செய்திகள் Canadian News

## Jenisha Arristan's Bharathanatya Arangetram on 04-08-2028, was a very successful one.

# சிறப்பாக நடைபெற்ற நடனச் செல்வி ஜெனிசா அரிஸ்ரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்



கடந்த 04-08-2024 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற நடனச் செல்வி ஜெனிசா அரிஸ்ரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்பாகவும் அழகுறவும் நடைபெற்றது என்றால் அது மிகையாகாது.

“கலைமன்றம் நுண்கலைக் கல்லூரியின் அதிபர் நிரஞ்சனா சந்துரு அவர்களின் வழிகாட்டலில் தனது பரதநாட்டிய பயிற்சியைப் பெற்று அன்றைய தினம் மேடையில் தான் பயின்றவற்றை கச்சிதமாகவும் அழகுறவும் மேடையில் செல்வி ஜெனிசா அரிஸ்ரன் அவர்கள் சமர்ப்பணம் செய்தார் என்பதை அரங்கேற்றத்தின் இறுதியில் உரையாற்றிய பிரதம விருந்தினர் பேராசிரியர் சந்திரகாந்தன் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.







அரங்கேற்ற நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர் ராகவன் பரஞ்சோதி அவர்கள் தொகுத்து வழங்கினார்.

திரு.திருமதி அரிஸ்ரன் தம்பதியின் புதல்வியான நடனச் செல்வி ஜெனிசா அரிஸ்ரன் அன்றைய தினம் பக்கவாத்தியக் கலைஞர்களினதும் நட்டுவாங்கம் செய்த இளம் இசைக் கலைஞர்கள் ஐஸ்வர்யா சந்துரு மற்றும் ஆகாஸ் கதிர்காமன் ஆகியோரின் நடன நெறியாழ்கையிலும் அனைத்து உருப்படிகளையும் அழகிய முறையிலும் நேர்த்தியாகவும் சமர்ப்பணம் செய்தமை சபையோரைக் கவர்ந்தது என்பதை அவர்கள் அடிக்கடி கரகோசம் செய்தமை காட்டி நின்றது.

பல இசை நடன ஆசிரியைகள் அங்கு கலந்து சிறப்பித்தார்கள். ஏனைய பக்கவாத்தியக் கலைஞர்களாக, ரதிரூபன் பரஞ்சோதி (மிருதங்கம்). ஜெயதேவன் நாயர் (வயலின்) மற்றும் விஸ்ணு (புல்லாங்குழல்) ஆகியோரினதும் பக்கவாத்திய இசையின் மேன்மையும் செல்வி ஜெனிசா அரிஸ்ரன் அவர்களின் நடனங்களை அழகின் எல்லைக்கு அழைத்துச் சென்றமையை காணக்கூடியதாக இருந்தது.

அரங்கேற்றத்தின் இறுதியில் மேடைக்கு ஆவலுடன் “படையெடுத்த” சபையோரும் உறவினர்களும் செல்வி ஜெனிசா அரிஸ்ரன் அவர்களை பாராட்டியும் பரிசளித்தும் விடைபெற்றனர்.

**- சத்தியன்**

## புகழ்பெற்ற நடனக் கலைஞர் மதுரை முரளிதரன் அவர்கள் கனடாவில் "நிரோ டான்ஸ் கிரியேசன்ஸ்" நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் முழு நீள நாட்டிய நாடகம்



சிவனின் தசஅவதாரங்கள் பற்றிய கலைத்துவமான மேடை நிகழ்வு இது.

17-08-2024 சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஆர்மேனியன் அரங்கில் நடைபெறுகின்றது.




# தமிழ் பொது வேட்பாளர் யார்?

### - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் மூலம் அதற்கு கிடைத்த ஆதரவையும் புகழையும் பலத்தையும் அடுத்தடுத்த தேர்தல்களில் தனிப்பட்ட அந்தக் கட்சியின் தேவைகளுக்கு பயன்படுத்துவதை எப்படி வரையறைக்கு உட்படுத்துவது என்ற கேள்வி. ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் அக்கட்சிச் சின்னம் பெற்ற வெற்றியை பின்னர் அக்கட்சியின் தனிநிலைபாட்டுக்கு மடைமாற்றக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

தமிழ் மக்கள் பொதுச் சபையிடம் கட்சி இருக்கவில்லை. அது கட்சி மய்யக் கட்டமைப்பும் அல்ல. அது தேர்தல் மையக் கட்டமைப்பு அல்ல என்பது தெளிவாக ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு பொது வேட்பாளருக்கு பயன்படுத்தப்பட்ட கட்சிச் சின்னத்தை அடுத்தடுத்த தேர்தல்களில் பயன்படுத்துவதில் வரையறைகளை விதிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் பொதுச்சபை எதிர்பார்த்தது. ஆனால் நடைமுறையில் கட்சிகள் அதற்கு முழுமையாகத் தயாராக இருக்கவில்லை. அந்த வரையறைகளில் தளர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்று கட்சிகள் எதிர்பார்த்தன.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், சுயேட்சையாக ஒரு முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் போட்டியிடும் பொழுது அங்கே கட்சிச் சின்னத்துக்கான தேவை இருக்காது. இந்த அடிப்படையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை போட்டியில் இறக்கலாமா என்றும் சிந்திக்கப்பட்டது. எனவே ஜனாதிபதித் தேர்தல் பொறுத்து ஏதோ ஒரு விதத்தில் கட்சிகளோடும் அரசியல்வாதி-களோடும் தொடர்பு-படுத்தித்தான் முடிவுகளை எடுக்க வேண்டிய சட்ட யதார்த்தம் ஒன்று உண்டு.

இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து ஒரு பொது வேட்பாளரை கண்டுபிடிப்பதற்கு சில கிழமைகள் எடுத்தன. ஊடகங்கள் எழுதுவதுபோல பல மாதங்கள் எடுக்கவில்லை. ஏனென்றால் தமிழ் மக்கள் பொதுச்சபை முதலில் வவுனியாவை கூடியது ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியாகும். அதன் பின் கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை இறுதியாக்கியது கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி ஆகும். அந்த உடன்படிக்கை கைச்சாத்தாகியது ஜூலை 22 ஆம் திகதியாகும்.

அப்படிப் பார்த்தால் பொதுக் கட்டமைப்பு ஒரு ஜனாதிபதி வேட்பாளரை தேடத்தொடங்கி பதினெட்டு நாட்கள்தான் கழிந்திருந்தன. ஒரு மக்கள் கூட்டத்தின் பொது நிலைப்பாட்டை முக்கியத்துவப்படுத்தி அப்பொது நிலைப்பாட்டின் கீழ் மக்களை ஒன்றிணைக்க வேண்டிய ஒரு ஆளுமையைத் தேடுவதற்கு பதினெட்டு மட்டுமல்ல பதினெட்டு மாதங்களை எடுத்துக் கொண்டாலும் தவறில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் அவ்வாறு வேட்பாளரைத் தேடுவதில் காலவரையறைகள் இருந்தன. எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துத்தான் ஒரு பொது வேட்பாளரைத் தெரிவு செய்ய வேண்டியிருந்தது. அப்பொது வேட்பாளரை ஒரு பொது நிலைப்பாட்டின் வெற்றியாக மாற்ற வேண்டியது கட்சிகளுடையதும் மக்கள் அமைப்பினுடையதும் உழைப்பில் தங்கியிருக்கின்றது.

# Ranil Non-Committal on Power Devolution says "Neither Plus Nor Minus"

- Siva Parameswaran




Presidential Ranil Wickremesinghe who is seeking a mandate to lead the country again has declined to make any firm commitment to power devolution with the Tamil people which was one of the root causes of the decades-long ethnic conflict and a long-standing demand of the Tamils.

"Neither plus nor minus" was his curt reply to local journalists in the North adding no firm decision has been taken on power devolution.

